www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 | இதழ் 16 | 2025 ஜூலை 20 - ஜூலை 26 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15



# காரைக்குடியில் வள்ளல் அழகப்பர் பெயரில் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும்

## சிவகங்கை மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது சிவகங்கை மாவட்ட மாநாடு கல்லல் நகரில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. ஜூலை 10 அன்று ஆயிரக்கணக்கான கட்சி உறுப்பினர்கள்கலந்துகொண்ட செங்கொடிப் பேரணி சிறப்பாக நடைபெற்றது. அதன் பின்னர் பேருந்து நிலையத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலர் சாத்தையா தலைமை வகித்தார். கல்லல் ஒன்றியச் செயலர் குணாளன் வரவேற்புரை ஆற்றினார். தேசியக் குழு உறுப்பினர் ஜி.இராமசாமி மாதர் சங்க மாநிலச் செயலர் தோழர் கண்ணகி விருதுநகர் மாவட்ட செயலர் செந்தில் குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பிரதிநிதிகள் மாநாடு ஜூலை 11 அன்று கல்லல் எம்.ஆர்.வி மகாலில் நடைபெற்றது. தலைமைக் குழுவாக மருது, மாரி, பாண்டி மீனாள் ஆகியோர் செயல்பட்டனர். குணாளன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். கோபால் வரவேற்புரை ஆற்றினார்.

47 பேர் கொண்ட மாவட்டக் குழு ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டது.

சாத்தையா மாவட்டச் செயலராகவும், கோபால், மருது ஆகியோர் உதவிச் செயலர்களாகவும், மணவழகன் பொருளாளராகவும் ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கல்லல் செயலர் குமார் நன்றி கூறினார்.

### மாநாட்டுத் தீர்மானங்கள்.

சிவகங்கை நகரில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வெறும் பெயரளவில் செயல்படுகின்றது. மதுரை இராஜாஜி மருத்துவமனை போன்று தரம் உயர்த்தப்பட வேண்டும். தரமான சிகிச்சை தர வேண்டும்.

காரைக்குடியில் வள்ளல் அழகப்பர் பெயரில் மருத்துவக்கல்லூரி தொடங்க வேண்டும்.

காரைக்குடி அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள டாக்டர்கள், செவிலியர்களின் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

மதுரையில் இருந்து மேலூர் வரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மெட்ரோ ரயில் திட்டம் திருப்பத்தூர் வழியாக காரைக்குடி வரை நீட்டிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





# பெரம்பலூர் மாவட்ட மாநாட்டில் பத்துக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றம்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பலூர் மாவட்ட 9வது மாநாடு ஜீலை 8ம் தேதி செவ்வாய்கிழமை பெரம்பலூர் ஜெ.ஜெ.மஹாலில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர்

ஆர்.முத்தரசன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, தேசியக் குழு உறுப்பினர் சிவபுண்ணியம், தேசியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராசு, மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் வீ.ஞானசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டுத் தலைமைக் குழு ஆர்.இராமராஜ், பொன்னம்மாள், பழனிச்சாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். முன்னாள் மாவட்டச் செயலாளரும், மூத்த தோழருமான அ.வேணுகோபால், மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். கடந்த மூன்றாண்டுகளில் மறைந்த கட்சியின் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து 50 ஆண்டுகால கட்சிப் பணியாற்றிய அ.வேணுகோபால், ஆர்.இராமராஜ், ந.இளமுருகன், ஆ.கந்தசாமி ஆ.தங்கவேல் ஆகியோர்களைப் பாராட்டி மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன் கைத்தறி ஆடைகளை அணிவித்தார். மாவட்டச் செயலாளர், அமைப்பு நிலை அறிக்கை தாக்கல் செய்தார். விவாதம் பதிலுரைக்குப்பின் தணிக்கைக்குழு அறிக்கையைப் பொருளாளர் ஆர்.இராமராஜ் முன்வைத்தார்.

மாவட்டத்தின் முக்கிய வளர்ச்சிக்குத் தேவையான பத்துத் தீர்மானங்கள் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் வீ.ஞானசேகரன் அவர்களால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் 13 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டு, இரண்டு இடங்கள் காலியாக வைக்கப்பட்டன. மாவட்டச் செயலாளராக 2வது முறையாக வி.ஜெயராமன், தேர்வு செய்யப்பட்டு துணைச்செயலாளராக க.பழனிச்சாமி, பொருளாளராக ஆர்.இராமராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநில மாநாட்டுப் பிரதிநிதிகளாக வி.ஜெயராமன், பெ.கலியபெருமாள், அ.கல்யாணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகம் பாலன் இல்லக் கட்டிட நிதி ரூபாய்.70,000/ (ரூபாய் எழுபதாயிரம்) முதல் தவணையாக மாநிலச் செயலாளரிடம் வழங்கப்பட்டது. முடிவில் மாவட்டச் செயலாளர் வி.ஜெயராமன் நன்றி கூறினார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 25வது வடசென்னை மாவட்ட மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 25வது வடசென்னை மாவட்ட மாநாடு ஜூலை 10, 11 ஆகிய தேதிகளில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மண்ணான இராயபுரத்தில் நடைபெற்றது.

முதல் நாள் ஜூலை 10 ஆம் தேதி இராயபுரத்தில் உள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மணிமண்டபத்தில் உள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன்பின் மாநாடு பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி தலைமையில் நடைபெற்றது.

எம்.எஸ்.மூர்த்தி முன்னாள் மாவட்டச் செயலாளர் வரவேற்புரை வழங்கினார். ஜீ.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர், த.செண்பகம், பா.கருணாகரன், இரா.கோட்டி சுரேஷ், ஆ.சுப்பிரமணி, எம்.வசந்தகுமார், வி.பெருமாள்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். இராயபுரம் பகுதி செயலாளர் யு.ஜீலானி நன்றியுரை கூறினார்.

ஜூலை 11 பிரதிநிதிகள் மாநாடு இராயபுரம் எம்.கே.எஸ் மகாலில் நடைபெற்றது.

ஜீ.சுப்ரமணி, எம்.ரேணுகா, எம்.ஜெயராமன் ஆகியோ தலைமையில் நடைபெற்றது. ஆர்.பாளையம் மாநாட்டுக் கொடியேற்றினார். எம்.எஸ்.மூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். இரா.இராமசாமி அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ மாநாடு துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி வேலை அறிக்கை வாசித்தார். வேலை அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது.

25 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது.மாவட்டச் செயலாளராக மீண்டும் த.கு.வெங்கடேஷ் வேம்புலி தேர்வு செய்யப்பட்டார்.

மாநில மாநாடு பிரதிநிதிகளாக த.கு.வெங்கடேஷ் வேம்புலி, எம்.எஸ்.மூர்த்தி, ஜீ.சுப்ரமணி, த.செண்பகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள்.






www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு
26 ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 | இதழ் 16 | 2025 ஜூலை 20 - ஜூலை 26 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# எட்டப்ப எடப்பாடியே! எட்டிப்பார்! சேலத்தில் குவிகிறது செம்படை!




போர்க்குணமிக்க தோழர்களே!

**நமது லட்சியம் என்ன என்று நாடு மட்டுமல்ல; உலகமே அறியும். சோசலிசம் எனும் மகத்தான லட்சியத்திற்காக நூற்றாண்டு காலமாய்ச் சமர் புரிந்து வரும் பேரியக்கம்!**

கம்யூனிஸ்டுகளின் நேர்மை குறித்து, எளிமை குறித்து, அர்ப்பணிப்பு குறித்து, தியாகம் குறித்து எவர் ஒருவரும் கேள்வி எழுப்ப முடியாது.

எத்தகைய சோதனைகள், வேதனைகள் வந்த போதும் அவைகளைத் துச்சமெனக் கருதி சமரசமின்றிப் போராடிய, போராடிக் கொண்டிருக்கிற மாபெரும் இயக்கமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

லட்சியப் பாதையில் இருந்து ஒருபோதும் வழுவாது போர்க்கொடி உயர்த்தி, நெஞ்சுரத்தோடு போராடி வருகின்ற பேரியக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதனை அரசியல் அறிந்தோர் அனைவரும் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்வர்!

நேற்று பெய்திட்ட மழையில் இன்று முளைத்து, நாளைய வெய்யிலில் காணாமல் போகும் இயக்கமல்ல கம்யூனிஸ்ட் கட்சி!

நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் தற்போதுள்ள குறைந்தளவு எண்ணிக்கையைக் கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை மதிப்பீடு செய்வது அரசியல் அரைவேக்காட்டுத்தனமாகும்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியை இழந்த போது, இங்கே உள்ள பலரும் பலவிதமான



கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**மாநில மாநாட்டை நோக்கி... 5**

பிறந்த இடத்தில் புதைகுழிக்கே சென்று விட்டது, இனி அது மீள முடியாது எனக் கொக்கரித்தவர்கள் உண்டு!

தங்களது பத்திரிகைகளில் எழுதி மகிழ்ந்தார்கள், தங்களது அறிக்கைகள் மூலம் மனம் மகிழ்ந்து போனவர்கள் உண்டு.

அரசியல் அறிந்தோர், இது தற்காலிகமான பின்னடைவு என்று குறிப்பிட்டதும் உண்டு!

நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது (1964) மகிழ்ந்தவர்கள் உண்டு.

பிளவு பட்டு இருக்கக் கூடாது என்று கூறியவர்களும் உண்டு!

கம்யூனிஸ்ட் கட்சி பலம் பொருந்திய, நிராகரிக்க முடியாத கட்சியாக இருந்தபோது நாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டதா இல்லையா?

நாடாளுமன்றத்தில் 61 உறுப்பினர்களைக் கொண்ட பலம் வாய்ந்த அணியாக இடதுசாரிகள் இருந்தபோது ஐக்கிய முன்னணிக் கூட்டணியில் மகாத்மா காந்தி கிராமப் புற வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது!

தகவல் உரிமை பெறும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பழங்குடி மக்களுக்கான பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது! நாடாளுமன்ற ஜனநாயகம் பூத்துக் குலுங்கியது!

இன்றைய நிலை என்ன? நாடாளுமன்ற ஜனநாயகம் இருக்கின்றதா? அரசியலமைப்புச் சட்டம் தள்ளாடுகின்றதே ஏன்?

பேச்சுரிமை, எழுத்துரிமையின் நிலை என்ன?

எவருக்கும் அடிபணியாமல் சுதந்திரமாக, சுயேச்சையாகச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம் என்கிற உயர்ந்தபட்ச அமைப்பின் கதி என்ன?

அமலாக்கத் துறையும், வருமான வரித்துறையும்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## முதலமைச்சர் உமர் அப்துல்லாவை வீட்டுக்காவலில் வைப்பதா?


### பொதுச்செயலாளர் டி.ராஜா கண்டனம்

காஷ்மீரில் 1931ஆம் ஆண்டு ஜூலை 13ல் மகாராஜா ஹரிசிங்கின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்றது. அப்போது டோக்ரா ராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் உயிரிழந்தனர். இந்த நாள் தியாகிகள் தினமாக ஜம்மு காஷ்மீரில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அரசு விடுமுறை நாளாகவும் இருந்தது. ஆனால், 2019 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீருக்கான சிறப்புத் தகுதி ரத்து செய்யப்பட்டு, யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்ட பிறகு பொது விடுமுறை நாள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. தியாகிகள் கல்லறையில் நிகழ்ச்சிகள் நடத்தவும் தடை விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டு தியாகிகள் நாள் அன்று, முதலமைச்சர் உமர் அப்துல்லா அஞ்சலி செலுத்த முடியாமல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இதேபோன்று பல தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். அவற்றையும் மீறி முதலமைச்சர் உமர்அப்துல்லா சுவர் ஏறிக் குதித்து, நினைவிடம் சென்று அஞ்சலி செலுத்தினார். அவருடன் குடிமக்களும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மற்றும் காவல்துறையின் நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், "தியாகிகள் நினைவுநாளில் தலைவர்கள் அஞ்சலி செலுத்தக்கூட தடை விதித்து, வீட்டுக்காவலில்





முடக்கியிருப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது. ஜம்மு காஷ்மீர் சர்வாதிகாரத்தால் ஆளப்படுவதன் அடையாளமாகவும் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அடிமைப்படுத்தியும் மவுனிக்கவும் வைப்பதற்குப் பதிலாக, மக்களுக்குத் தொண்டாற்றக் கூடிய வகையில் மாநிலத் தகுதியை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும்" என்றும் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

– மணிமாறன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்
ஜனசக்தி
மலர் 88 இதழ் 16

# இல்லாத குறளும் இந்துத்துவாவும்

மருத்துவர்கள் தினத்தை ஒட்டி, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, 50 மருத்துவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கியுள்ளார்.

அதில் திருவள்ளுவர் எழுதிய, 944வது திருக்குறள் என்ற பெயரில், "செருக்கறிந்து சீர்மை பயக்கும் மருப்பொடு மன்னுஞ் சொல் மேல்வையப் பட்டு" என்று எழுதப்பட்டுள்ளது.

944வது குறள் மட்டுமல்ல, இதுபோன்ற ஒன்று திருக்குறள் முழுதும் தேடினாலும் கிடைக்கவில்லை.

ஒரு மேற்கோள் காட்டப்படுகிறது என்றால், அது வலுவான ஒரு விஷயத்தை வலியுறுத்த வேண்டும். இவர்கள் அச்சிட்ட அந்த வரி, என்ன பொருளை வலியுறுத்துகிறது? திருக்குறள் எதுவெனவே தெரியாதவர்களுக்கு அதன் பொருளைப் பற்றிய கவலை என்ன இருக்கப் போகிறது!

திருக்குறளை, திருவள்ளுவரை மதிக்கிறோம் என்று காட்டிக் கொள்வது மட்டுமே அதன் நோக்கம். ஆர்.என்.ரவியின் பரிவாரத்துக்கு திருக்குறள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் தமிழ்ச் சமூகம் இந்தப் பகட்டில் ஏமாந்து போகுமா என்ன?

வழக்கமாகவெண்ணிறத்தில்உடைஅணிந்ததிருவள்ளுவருக்குப் பதிலாக, காவி உடை அணிவித்து, நெற்றியிலும் கரங்களிலும் திருநீறு பட்டையிட்டு, நடுவில் குங்குமப்பொட்டு வைத்து, அதுவும் போதாதென மார்பின் குறுக்கே பூணூல் அணிவித்து வரையப்பட்ட படத்தை வைத்து வணங்கினார் ஆளுநர் ரவி.

"பாரதிய சனாதனப் பாரம்பரியத்தின் ஒளிமிக்க முனிவரான மாபெரும் தத்துவஞானி, கவிஞர் திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்துகிறேன்" என்றும் பேசினார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சமத்துவம் பேசிய வள்ளுவரை, மனிதருக்குள் ஏற்றத்தாழ்வை விதைக்கும் சனாதனத்தின் பிரதிநிதியாகக் காட்ட காவிக் கூட்டம் முயற்சிக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் திருவள்ளுவருக்குச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குக் காவித் துண்டு அணிவிப்பது, காவிச் சாயம் பூசுவது என்று சங்கி விடலைகள் தமது மடமையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் பாஞ்சஜன்யா பத்திரிகையில் ஆசிரியராக இருந்த, தருண் விஜய் என்ற நாடாளுமன்ற உறுப்பினர், சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கு வந்து திருக்குறள் பற்றிப் புகழ்ந்து பேசினார். ஊடகங்கள் எல்லாம் அதற்கு ஒளிவெள்ளம் பாய்ச்சின.

பெரும் தமிழ்ப் பற்றாளர் போல அவர் செய்த ஆரவாரத்தில் மயங்கி "திருவள்ளுவர் சிலை மீது சித்தாந்தச் சாயம் பூசப்படுவதைத் தமிழ்ச் சமூகம் எதிர்க்கும்" என்று தெளிவாக நிலை எடுக்கும் கவிஞர் வைரமுத்து கூட, அவரை அப்போது நேரில் சந்தித்துக் கட்டித்தழுவிக் கொண்டார்.

வள்ளுவரின் 12 அடி உயரச் சிலையை இந்து மதப் புனித இடமான அரித்துவாரில் கங்கைக் கரையில் நிறுவப் போகிறேன் என்று எடுத்துச் சென்றார்.

ஆனால் அங்கு, தமிழ்நாட்டில் இருந்து தாழ்ந்த குலத்தில் பிறந்தவரின் சிலையைப் புனித இடத்தில் வைப்பதா, இந்து தர்மத்துக்கு விரோதம் என்று அங்கிருந்த சங்கிகள் கலவரம் செய்தார்கள். சிலையைத் தூக்கி ஒரு ஆளரவமற்ற பூங்காவில் படுத்த நிலையில் கிடத்தி விட்டுப் போனார் தருண்.

பின்னாளில், "கறுப்பு நிறத்தவரான தென்னிந்தியர்களோடு சேர்ந்து வாழ்கிற எங்களை எப்படி இனவெறியன் என்று சொல்லலாம்" என்று அல்ஜஸீரா தொலைக்காட்சிக்கு தருண் விஜய் பேட்டி அளித்த போது அவரது சுயரூபம் வெளிப்பட்டது.

தொன்னெடும் காலமாக, அன்பின் மேன்மையை, அறிவின் வலிமையை, அறத்தின் கூர்மையை, தமிழ், தன் மக்களுக்குச் சொல்லி வளர்த்திருக்கிறது.

இதனை மடைமாற்ற, இறை நம்பிக்கை மத நம்பிக்கையை பயன்படுத்தி, தனக்கென்று ஒரு இடத்தைத் தோற்றுவிக்க இந்துத்துவா சக்திகள் அலைகின்றன.

இதனால்தான் திருவள்ளுவர் மீதும் தமிழ் இலக்கியம் மீதும் இந்தச் சங்கிக் கூட்டத்துக்குத் திடீர் பக்தி தோன்றியிருக்கிறது. இங்குள்ள மனிதநேயப் பாரம்பரியத்தைச் சற்று ஒதுக்கி விட்டு, தனது மானுட விரோதக் கருத்துகளைப் புகுத்துவதற்குத் தவியாய்த் தவிக்கிறார்கள்.

திருவள்ளுவரே அதற்கும் பதில் சொல்லி இருக்கிறார்.

"அன்பகத்து இல்லா உயிர் வாழ்க்கை, வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த் தற்று."

அதாவது மனதிற்குள் அன்பில்லாத உயிர் வாழ்க்கை, வறண்ட பாலைவனத்தில் நிற்கும் பட்டுப்போன மரத்தைப் போல ஒருபோதும் துளிர் விடாது.

ஆர்.என்.ரவி என்ன விளையாட்டுப் போட்டாலும், ஆர்.எஸ்.எஸ், பாஜக, இந்து முன்னணி இத்யாதி மதவெறி சக்திகள் இங்கு துளிர் விட முடியாது. இறை நம்பிக்கை என்பது அன்பைத் துறப்பதோ, அறிவை இழப்பதோ அல்ல என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவர்.

சிலப்பதிகாரம் எச்சரிப்பது போல "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்".

# போயர் சமூக மக்களின் நிலம் அபகரிப்பு

## த.ஒ.வா.இயக்கம் மீட்பு



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டம் இராயப்பனூர் செல்லியம்பாளையம் பகுதியில் இந்து போயர் சமூக மக்கள் சுமார் 50 க்கு மேற்பட்ட குடும்பங்கள் சுமார் 90 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகின்றன. இவர்களிடம் பட்டா உரிமைகள் மற்றும் வருவாய்த் துறை அனைத்து ஆவணங்கள் உள்ளன.

இந்நிலையில் ஆதிக்கச் சாதி அழகு வேலு என்பவர் மேற்படி மக்களில் ஒருவரிடம் குறிப்பிட்ட நிலம் கிரையம் பெற்றுக் கொண்ட பிறகு நில அளவை செய்கிறார். அதில் அவர் இடம் வாங்கிய அளவீட்டுக் கல் போடப்பட்டது.

இந்த மக்கள் தலைமுறை தலைமுறையாக நிலவழிப் பாதை இவர்கள் பயன்பாட்டில் உள்ளதை மேற்படி நபர் வருவாய்த் துறை ஆவணங்களில் திருத்தம் செய்து பொதுப் பாதை என்று அறிவித்து போயர் மக்கள் குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு அகற்றிட உத்தரவு அறிவிப்பு வரப்பட்டுள்ளது

14.07.25 ஆக்கிரமிப்பு அகற்றம் என்று கடிதம் 13.07.25 இரவு 10 மணிக்குக் காவல்துறை ஒட்டி புகைப்படம் எடுத்துக் கொண்டனர். மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன், சிபிஐ சின்னசேலம் ஒன்றியச் செயலாளர் கஜேந்திரன், ஏஐவொய்எஃப் மாவட்டப் பொருளாளர் சிவராமன், த.ஒ.வா.இ மாவட்டக் குழு பெரியநாயகம் உள்ளிட்ட 15 க்கும் மேற்பட்டவர்கள் மக்கள் பாதுகாவலர்களாக களத்தில் நின்றனர்.

சின்னசேலம் வருவாய் வட்டாட்சியர் பாலகுரு தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் வருகை தந்தார்கள். மேற்படி நிகழ்வுகள் சுட்டிக்காட்டி மேலும் நீதிமன்றம் உத்தரவு 22 தேதி வரை அவகாசம் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் உத்தரவு எங்கள் தரப்புக்கு வழங்காமல் நீங்கள் இந்நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று உறுதியாக எங்கள் கருத்து வலியுறுத்தப்பட்டது.

வருவாய்த் துறையின் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு எதிராக நின்றதின் எதிரொலியாக அகற்றும் பணி பின்வாங்கப்பட்டது.

# திருநாவலூரில் சவப்பாடை ஆர்ப்பாட்டம்

## தஒவாஇ கூட்டம் முடிவு



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்ட உளுந்தூர்பேட்டை வட்டக் குழு கூட்டம் திருநாவலூர் கெடிலம் கோவிந்தராஜ் திருமண மண்டபத்தில் கே.ஆறுமுகம் வட்டத் தலைவர் தலைமையில் 13.7.2025 அன்று நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன் விளிம்பு நிலை மக்கள் உரிமைகளைக் குறித்தும், கட்சியின் 26வது மாநில மாநாட்டை விளக்கியும் எடப்பாடி பழனிசாமி கம்யூனிஸ்ட் கட்சி பற்றி இழிவாகப் பேசியதற்குக் கண்டனம் தெரிவித்துப் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட தலைவர் கோவிந்தராஜ், துணைச் செயலாளர் ஒசூரான், துணைத் தலைவர் மாயவன், வட்டச் செயலாளர் பாபு, வட்டதுணைத் தலைவர் கே.ஆனந்தன், துணைச் செயலாளர் பெரியநாயக்கம், வட்டப் பொருளாளர் எ.செந்தில், மணிகண்டன், என்.அங்கம்மாள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### தீர்மானங்கள்

சேந்தமங்கலம் ஆதிதிராவிடர் சுடுகாடு, கழிவறை காட்சிப் பொருளாக உள்ளன. திருநாவலூர் சமத்துவபுரம் குடியிருப்புக் குடிநீர்த் தொட்டி காட்சிப் பொருளாக உள்ளது. சுடுகாடு, சுடுகாட்டுப் பாதை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரி. 18.07.2025 திருநாவலூர் பிடிஓ ஆபிஸ் முன்பு சவப்பாடை ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. வெ.ஜானகிராமன் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்கக் கோரிக்கை விளக்கக் கருத்தரங்கம்

தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்கம் சேலம் மாவட்ட அமைப்புக் குழு கூட்டம் மற்றும் கோரிக்கை விளக்கக் கருத்தரங்கம், சேலம் வங்கி ஊழியர் சங்கம் அலுவலகத்தில் ஏ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. எம்.மணிகண்டன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவத் துறைப் பணியாளர் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.மோகன், ஏஐடியுசி தேசியக் குழு உறுப்பினர் எம்.முனுசாமி, மாவட்டப் பொதுச் செயலாளர் எஸ்.சம்பத், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் பொதுச் செயலாளர், கே.விஜயகுமார், ஏஐடியூசி நிர்வாகிகள் டி.என். பெரியசாமி, எம்.ஷாநவாஸ்கான், தமிழ்நாடு டிபிசி தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.சதீஷ், பொருளாளர் க.பூமிநாதன், மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆர்.மகாலிங்கம், துணைத் தலைவர்கள் பி.சுதா, ஆர்.குணசேகர், ஏஐஎஸ்எப் மாநிலச் செயலாளர் தினேஷ் உள்ளிட்டோர் உரையாற்றினர். ஏ.மணி நன்றி நவின்றார். இக்கருத்தரங்கில் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கொசு ஒழிப்பு டி.பி.சி பணியாளர்களுக்கு, சேலம் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும். அரை திறமையான தொழிலாளி கிரேடு 1 என வகைப்படுத்தி, இவர்களுக்குத் தினக்கூலி வழங்கப்பட வேண்டும். ஆனால், இவர்களைத் திறமையற்றவர் எனத் தவறாக வகைப்படுத்தி இவர்களுக்கு ரூபாய் 523 ஊதியம் மட்டுமே வழங்கப்படுகிறது. அந்த ஊதியமும் முறையாக வழங்கப்படவில்லை. எனவே கிரேடு 1 என வகைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும். டி.பி.சி.பணியாளர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் போன்று, சில இடங்களில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படும் ஈ.எஸ்.ஐ மற்றும் பி.எஃப் திட்டத்தைத் தமிழகமெங்கும் விரிவுபடுத்திட வேண்டும்.

டிபிசி தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சீருடை வழங்கிட வேண்டும். மாத ஊதியம் வழங்கிட வேண்டும். ஊதியத்துடன் வார விடுமுறை, தேசிய விடுமுறை நாட்களில் விடுமுறை வழங்கிட வேண்டும். பணியாளர்களைப் பணிநீக்கம் செய்திடக் கூடாது. அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கலைஞர் சிலை மீது கறுப்பு பெயிண்ட் பூசிய சங்கிகள்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :

தமிழக மக்களின் பேராதரவையும், பெருமதிப்பையும் பெற்றுத் திகழும் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை, அண்மையில் சேலம் மாநகரில் அண்ணா பூங்காவில் திறந்து வைக்கப்பட்டது. இந்த வெண்கலச் சிலை மீது கறுப்பு பெயிண்ட் வீசி, அவமதிக்கும் ஈனத்தனமான செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக அரசியலைக் காவிமயமாக்கி வரும் சங் பரிவார் கும்பல் இத்தகைய இழி செயல்களில் ஈடுபட்டு வருவதை இதுவரை நடந்த சம்பவங்களின் விசாரணை நடவடிக்கைகள் உறுதி செய்துள்ளன.



உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வள்ளுவர் சிலைக்குக் காவி பூசி, பூணூல் போட்டதும், பெரியார், அண்ணல் அம்பேத்கர், எம்ஜிஆர் என மக்கள் மனதில் உயர்ந்து நிற்கும் தலைவர்களின் சிலைகளை உடைத்தும், வண்ணம் பூசியும், சுய மகிழ்வு கொள்ளும் கூட்டம் இப்போது கலைஞர் சிலை மீது கறுப்பு பெயிண்ட் வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இது தமிழ்நாட்டைப் பெரும் அமளிக் காடாக்கி, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான அரசியல் சதியின் ஒரு வடிவமாகும். கலைஞர் சிலை மீது கறுப்பு பெயிண்ட் வீசிய குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க விடாமல் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்துக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## எட்டப்ப எடப்பாடியே! எட்டிப்பார்! 3 ஆம் பக்க தொடர்ச்சி

எவ்வாறு, யாருக்கு எதிராகச் செயல்படுகின்றது?

மாநிலங்களுக்குரிய உரிமைகளின் நிலை என்ன? நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் ஏன்? திட்டக் குழு கலைக்கப்பட்டதன் நோக்கமென்ன?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிராக, ஆளுநர் என்று கையாளைக் கொண்டு, மாநில ஆட்சிகளுக்கு எதிராகப் போட்டி அரசாங்கம் நடத்துவது எவ்வகை ஜனநாயகம்?

நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளில் எல்லா மொழிகளையும் பின்னுக்குத் தள்ளி, மக்கள் தமக்குள் பேசிக்கொள்ளாத மொழியான சமஸ்கிருத மொழிக்கு மட்டும் பல ஆயிரம் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்குவது ஏன்?

இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதற்குத் தேசியக் கல்விக் கொள்கை 2020 எனக் கூறி மாநிலங்கள் ஏற்கத்தான் வேண்டும் என நிர்பந்திப்பதன் உள்நோக்கம் என்ன?

ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை ஏற்க மறுத்தால் நிதி கொடுக்க முடியாது என்று அடம்பிடிப்பது எவ்வகை ஜனநாயகம்?

இவை போன்ற எண்ணற்ற கேள்விகள் உண்டு! இவைகளுக்கு எல்லாம் பதில் உண்டா?

தமிழ்நாட்டிற்கு, தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து வஞ்சகம் புரிவோருக்குத் துணை போகலாமா?

தமிழ்நாட்டையும், தமிழக மக்களையும் புறக்கணிக்கின்ற, வஞ்சிக்கின்ற, துரோகம் புரிகின்ற பா.ஜ.கவோடு அரசியல் அணி சேரலாமா?

கட்சியின் அடிமட்டத் தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் துரோகக் கும்பலோடு சேர்ந்து துணை போகலாமா?

தன் சொந்த நலன் ஒன்றைத் தவிர வேறு நோக்கம் ஏதேனும் உண்டா?

நீட்டிய இடங்களில் எல்லாம் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்துப் போட்டவர், கூச்சநாச்சமின்றி யாரையோ காக்கப் போவதாக, மீட்கப் போவதாக பிரச்சாரம் மேற்கொள்கிறாராம், பிரச்சாரம்!

என்ன பிரச்சாரம் அது? கம்யூனிஸ்டுகளைக் காணவில்லை யாம், இருக்கும் இடம் தெரியவில்லையாம்!

இப்படிச் சொல்பவர் யார் தெரியுமா? தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடந்து 14 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்ட போதும், நூற்றுக்கணக்கானவர்கள் குண்டு காயம் பட்டும், காட்டுமிராண்டித்தனமான காவல்துறையின் தாக்குதலுக்கு உள்ளான போதும், காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மாண்புமிகு முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? தொலைக்காட்சியைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன் என நாக்கில் நரம்பின்றி, கொஞ்சம் கூட குற்றவுணர்வு அற்றவராகக் கூறினார் என்பதனை தமிழ்கூறும் நல்லுலகம் ஒருபோதும் மறக்காது, மன்னிக்காது!

அப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்தவர்தான் கூறுகின்றார்! கம்யூனிஸ்டுகளைக் காணவில்லை, இருக்குமிடம் தெரியவில்லை எனப் புலம்பித் தீர்த்துள்ளார்!

தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுத்த எட்டப்பராக மாறிவிட்ட எடப்பாடியாரே கொஞ்சம் நில்லுங்கள்!

உங்களுக்கு என்னென்னமோ பணிகள் இருக்கின்றன, தமிழ்நாட்டை வலம் வந்து கொண்டிருக்கின்றீர்கள்!

பரப்புரையில் தீவிரமாக, மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளீர்கள், ஓய்வின்றிப் பணியில் ஈடுபட்டுள்ள உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.

ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் உங்கள் சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டு, நீங்கள் வாழ்ந்து வரும் சேலம் மாநகரில் உள்ள உங்கள் ஆகப் பெரிய பங்களாவில் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

அதுதானே உங்கள் குகை! உங்கள் சொந்த ஊரிலேயே பேராற்றல் கொண்ட, ஆற்றல் மிக்கச் செம்படை அணிவகுத்து வருகின்றது.

கம்யூனிஸ்டுகள் இருக்கின்றார்களா? தேய்ந்து விட்டார்களா என்பதனை உங்களின் இரு கண்களிலும் விளக்கெண்ணெய் ஊற்றி உற்றுப் பாருங்கள்!

நாங்கள் யார் என்பது தெரியும், தெரிந்து கொள்ள முடியும்! புரிந்து கொள்ளவும் முடியும்!

கம்யூனிஸ்டுகளைக் காணவில்லை, தேய்ந்து போய் விட்டார்கள், முகவரி இல்லை என்று கூவுவது புதிதல்ல, உங்களது கருத்தியல் தகப்பன்களும், தாத்தாக்களும் கூடக் கூறியிருக்கிறார்கள்.

ஓராயிரம் குரல்களைக் கேட்டு கேட்டு எங்களுக்கு அலுத்துப் போய்விட்டது! ஆனாலும் நீங்கள் இப்போது புதிதாகக் கண்டு பிடித்துக் கூவுகின்றீர்கள்!

உங்களின் கூற்று வெறுப்பில், ஆத்திரத்தில் கூறும் கூற்றாகும்! உங்களது வெற்றுக் கூச்சல், கம்யூனிஸ்ட் இயக்கத்தின், அதன் மகத்தான தொண்டர்களின் கால் தூசுக்குச் சமம் என்பது வெட்ட வெளிச்சமாகும் நன் நாள்தான் ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள்!

வந்து பார் அகன்ற கண்கொண்டு பார் நீ மட்டுமல்ல நீ புதுப்பித்துக் கொண்ட புதிய கூட்டணியான ஆர்.எஸ்.எஸ் கும்பலையும் அழைத்து வா!

இருவருமாக இணைந்தே வந்து பார்த்திடுவீர்!

படை வருகின்றது! பட்டாளம் வருகின்றது, செம்படை வருகின்றது, ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குடும்பம், குடும்பமாக லட்சக்கணக்கில் அணி திரண்டு, அணிவகுப்பதை வந்து பார்!

பணம் வாங்கிக் கொண்டல்ல, பாட்டில் வாங்கிக் கொண்டல்ல, பிரியாணி பொட்டலம் வாங்கிக் கொண்டல்ல! தனது வியர்வை சிந்தி, உழைப்பால் பெற்ற ஊதியம் கொண்டு சேலம் வருகின்ற படைதான் செம்படை. சீருடை அணிந்த செந்தொண்டர்களின் அணிவகுப்பு.

இராணுவத்தின் மிடுக்கான அணிவகுப்பையும் மிஞ்சிடும் அணிவகுப்பு! செந்தொண்டர் படையின் அணிவகுப்பு.

சகோதரிகளும், தாய்மார்களும் கரங்களில் செங்கொடி ஏந்தி செஞ் சேலையுடன் அணி வகுப்பு.

செஞ்சட்டையும் சிவப்புத் துண்டோடும் கரங்கள் அனைத்திலும் செங்கொடியோடு அணிவகுக்கும் மாபெரும் அணிவகுப்பு.

ஒவ்வொரு மாவட்டமும் கரகாட்டம், பறை முழக்கம், கொம்பு, கோலாட்டம், கும்மியாட்டம் என சேலம் மாநகரமே விழாக் கோலம் காணவுள்ளது.

கடல் அறியா சேலம் மாநகரில் செங்கடல் சங்கமிக்க வருகின்றது.

இக்கடலைக் காண கண்கோடி வேண்டும்பா!

எடப்பாடியப்பா, எட்டப்பா வருவாயா? கூட்டாளியோடு வருவாயா? பார்ப்பாயா? வந்து பார்? உன் குகைக்குள்ளே செங்கொடி புதல்வர்களின் அணிவகுப்பைப் பார், அவர்கள் எழுப்பும் அர்த்தமுள்ள முழக்கத்தைக் கேள்! உன் சிந்தை தெளியும்!

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க

## ஜனசக்தி 79வது சுதந்திர தினச் சிறப்பிதழ்

தோழர்களே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாடு சேலத்தில் ஆகஸ்ட் 15 முதல் 18 வரை நடைபெறுகிறது.

நூறாண்டுகளுக்கு மேல் போராடி, இந்தியாவுக்கான விடுதலை வென்றெடுக்கப்பட்ட 79ம் ஆண்டு கொண்டாட்டங்களின் போது, கட்சியின் மாநில மாநாடு துவங்குகிறது.

இந்தியாவின் விடுதலைத் திருநாளையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டையும் சிறப்பிக்கும் வகையில், மாநாடு துவங்கும் விடுதலைத் திருநாளான ஆகஸ்ட் 15ம் தேதியன்று ஜனசக்தி, சுதந்திர தினச் சிறப்பிதழை வெளியிடுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்ட 1925 டிசம்பர் 26ஆம் நாளன்றே, 'இந்தியாவுக்கு முழு விடுதலை வேண்டும்' என்ற முழக்கத்தை வைத்தது. அதுவரை பிரிட்டிஷ்காரர்களின் மேலாண்மையின் கீழ், இந்தியர்களும் ஆட்சியில் பங்கேற்கும் டொமினியன் தகுதி தந்தால் போதும் எனக் கேட்டு வந்த காங்கிரசை 'முழு விடுதலை' கோரிக்கையை ஏற்கச் செய்வதற்காக 1929 வரை போராடியது.

விடுதலைப் போராட்டத்தில் லட்சக்கணக்கான தொழிலாளர்களை, உழைக்கும் மக்களை ஈடுபடுத்தியது. விடுதலைப் போராட்டத்தின் கடைசி இயக்கமான கப்பற்படைக் கிளர்ச்சியை முன்னணியில் நின்று நடத்தியது.

இவை குறித்த செறிவான கட்டுரைகள், காணற்கரிய புகைப்படங்கள், நூற்றாண்டு காணும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவற்றைத் தாங்கி வரும் இந்தச் சிறப்பிதழ் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாக இருக்கும்.

இதில் வெளியிடுவதற்கான விளம்பரக் கட்டணங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. விளம்பர வேண்டுகோள் தனியே அஞ்சல் வழியாக அனுப்பப்படும். ஒவ்வொரு மாவட்டமும் ஒரு பக்கத்துக்குக் குறையாமல் விளம்பரம் திரட்டித் தந்து உதவ வேண்டுகிறோம்.

### விளம்பரக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | 15,000 |

**நமது நண்பர்கள், கட்சி அனுதாபிகளின் நிறுவனங்கள், தோழமைக் கட்சியினரிடம் விளம்பரங்கள் பெறுவதோடு, நமது வெகுமக்கள் அமைப்புகள், கட்சியின் மாவட்ட, இடைக் குழுக்களும் விளம்பரங்கள் தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

தோழமையுள்ள

**இரா.முத்தரசன்**

மாநிலச் செயலாளர்

தோழமைமிக்க,



**(இரா.முத்தரசன்)**

மாநிலச் செயலாளர்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டதும் - தடை நீக்கப்பட்டதும்



எம்.ரவி

2

**1939 ஆம் ஆண்டு பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு நடைபெற்ற தேர்தலில் தோழர் ஜி.அதிகாரி அவர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். மேலும், அதேபோல் பல கம்யூனிஸ்டுகளும் காங்கிரஸ் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வேண்டும் என்றும், அது சட்டபூர்வமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்றும் பிரிட்டீஷ் அரசாங்கத்தை காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் சார்பாக தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தெளிவான நிலைப்பாட்டினை எடுத்தது.

ஒரே நேரத்தில் ''பாசிசத்தை எதிர்ப்பது'' ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது'' என்ற நோக்கமும் போராட்டமும் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. 'கொடூரமான பாசிச சக்திகளிடமிருந்து உலகைக் காப்பாற்றுகிற நோக்கத்தைப் பின் தள்ளி, உலகப் போரின் முடிவு எதுவானாலும் பரவாயில்லை, இந்தியாவுக்கு விடுதலை வேண்டும்' என்பது காங்கிரஸ் நிலைபாடாகவும், 'பாசிச சக்திகளாக இருந்தாலும் பரவாயில்லை, ஜெர்மனியின் உதவியோடு இந்தியாவின் விடுதலையை வென்றெடுக்க வேண்டும்' என்பது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் நிலைப்பாடாகவும் இருந்தன.

இந்த இரண்டு நிலைப்பாடுகளையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதிபட எதிர்த்தது. இதனால், காங்கிரஸ் கட்சிக்குள் இயங்கிக் கொண்டிருந்த தலைமறைவாக செயல்பட்டு போராட்டங்களை தொடர்ந்து வழிகாட்டி நடத்தி வந்தனர். 6 மாத காலம் கம்யூனிஸ்டுகள் மீது பிரிட்டிஷாரின் அடக்குமுறைகள் கோரத்தாண்டவமாடின.

இந்தச் சூழலில், ஏகாதிபத்திய நாடுகளுக்குஇடையேநடந்துகொண்டிருந்த உலக யுத்தத்தின் போக்கு திசை மாறியது. யுகப் புரட்சி நடத்தி மக்களுக்கு சிறந்த வாழ்வை வழங்கிக் கொண்டிருந்த சோசலிச நாடான சோவியத் யூனியன் மீது 1941 ஜூன் 22ஆம் தேதி பாசிச ஹிட்லரின் நாஜிப்படைகள் தாக்குதலை தொடுத்தது. சோவியத் யூனியனை வீழ்த்திவிட்டு இயற்கை செல்வ வளம் கொழிக்கும் இந்தியாவை கைப்பற்றும் நோக்கத்துடன் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால்,உலக யுத்தத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான பாசிச எதிர்ப்பு கூட்டணி உருவானது. கம்யூனிஸ்ட் அகிலம் பாசிச சக்திகளுக்கு எதிரான

### தமிழ்நாட்டில் முதல் மாநில அமைப்பு:

1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சேலம் மாவட்டம், திருசெங்கோட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில முதல் அமைப்பு உருவாக்கப்பட்டது. தோழர் மோகன் குமாரமங்கலம் மாநில செயலாளராகவும், தோழர் எம்.ஆர்.வெங்கட்ராமன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் ப.ஜீவானந்தம், பி.சீனிவாசராவ், சி.எஸ்.சுப்பிரமணியம், ஆர்.கே.கண்ணன், எம்.கல்யாணசுந்தரம் ஆகியோர் அடங்கிய முதல் மாநில குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

1934 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சட்டவிரோத அமைப்பு என தடை செய்யப்பட்டு இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தற்போது 8 ஆண்டுகள் கழித்து தடை நீக்கப்பட்டு முதல் முறையாக சட்டபூர்வமாக செயல்படும் கட்சியாக மாறியது. இது குறித்து 1943 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் தேதி முதல் ஜூன் 1 ஆம் தேதி வரை பம்பாயில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டில் அருமை தோழர் பி.ஜி ஜோசி அவர்கள் உரை நிகழ்த்திய போது



◆ மோகன் குமாரமங்கலம், எம்.ஆர்.வெங்கட்ராமன், ப.ஜீவானந்தம், பி.சீனிவாசராவ், சி.எஸ்.சுப்பிரமணியம், ஆர்.கே.கண்ணன், எம்.கல்யாணசுந்தரம்

வலியுறுத்தி தீர்மானங்கள் இயற்றப்பட்டன. மேலும், அதற்கான மனுக்களை தயாரித்து, கையெழுத்து இயக்கங்களை நடத்தி பிரிட்டீஷ் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதேபோல், மாகாண காங்கிரஸ் அமைச்சரவைகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1939 ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் தேதி நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள்ளும் இருந்த கம்யூனிஸ்டுகள் மற்றும் இடதுசாரி உணர்வு கொண்ட காங்கிரஸ்காரர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து மகாத்மா காந்தி முன்மொழிந்த பட்டாபி சீத்தாராமையாவை தோற்கடித்து, சுபாஷ் சந்திரபோஸை 200 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தனர். இதனால் மகாத்மா காந்திக்கும் சுபாஷ் சந்திர போஸுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறி பார்வார்டு பிளாக் என்ற கட்சியை தொடக்கினார்.

காங்கிரஸ் கட்சிக்குள் கடும் குழப்பங்கள் ஏற்பட்டன. தீவிர எண்ணம் கொண்டவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தகைய சூழலில், உலகத்தில் இரண்டாவது உலகயுத்தம் ஐரோப்பாவில் தொடங்கியது. 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜெர்மன் நாட்டு பாசிச ஹிட்லரின் படைகள் போலந்தையும், இங்கிலாந்தையும் தாக்கின. இந்தியாவை ஆட்சி செய்துவந்த பிரிட்டிஷ் வைசிராய் இந்தியாவில் யுத்த கால அவசரநிலை பிரகடனத்தை அறிவித்தார். மாநிலங்களில் ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் அமைச்சரவைகளின் சில அதிகாரங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் காங்கிரஸ் அமைச்சரவைகள் அக்டோபர் 23 ஆம் தேதி ராஜினாமா செய்தன.

இந்தத் தருணத்தில் தலைமறைவாக செயல்பட்டுக் கொண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸ் காரர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டன.

தலைமறைவாக செயல்பட்டு வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போர்குணத்துடன் களத்தில் இறங்கியது. உலக யுத்தத்திற்கு எதிராகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உழைக்கும் மக்களை திரட்டி போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் மிக பிரமாண்டமான முறையில் நடத்தியது.

1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்தன. ''யுத்த அலவன்ஸ்''கேட்டும், ''பஞ்சப்படி''கேட்டும் தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தங்களை மேற்கொண்டனர். தொழிலாளர்கள், விவசாயிகள் நடத்திய போராட்டங்களோடு, ''அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் அறை கூவலை ஏற்று ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மாணவர்களின் போராட்டங்களும் வீறு கொண்டெழுந்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போவதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ''இந்திய பாதுகாப்புச் சட்டம்'' என்ற ஒரு புதிய சட்டத்தை அறிவித்தது.

இந்தச் சட்டத்தை பயன்படுத்தி அன்றைய இந்திய உள்துறை இலாகாவுக்கு பொறுப்பாளராக இருந்த ரெஜினால்ட் மார்க்ஸ்வெல் என்பவர், இந்த போராட்டங்களைத் தலைமறைவாக இருந்து கொண்டு தூண்டிவிட்டுக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகளையும் அதற்கு ஆதரவாக செயல்பட்டவர்களையும் விசாரணை ஏதுமின்றி கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டார். ஏராளமான கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் அரைகுறையான சட்ட அனுமதியுடன் வெளிவந்து கொண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிக்கைகள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டன.

ஆயினும் சில கம்யூனிஸ்ட் தலைவர்கள் யுத்தத்தை ''மக்கள் யுத்தம்'' என்று பிரகடனம் செய்தது. உலக மக்களை காப்பதற்காக இந்த மக்கள் யுத்தத்தில் இந்திய மக்கள் பங்கேற்போம் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்து அறிவித்தது. 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் தேதி பிரிட்டீஷ் இந்திய அரசு, அரசாணை எண்: 2152 இன்படி கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டது.

''இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தங்களுடைய அறிவிப்புகளிலும், கட்சி உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கைகளிலும் ஒரு அணி மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேலும், உலகில் நடக்கும் இந்த யுத்தத்தை ஒரு ''மக்கள் யுத்தமாக'' அங்கீகரித்துள்ளது. இந்திய மக்கள் தங்களது சொந்த நலனை முன்னிட்டு ஐக்கிய சுதந்திரம் விரும்பும் நாடுகளுடன் பொதுவான லட்சியத்தை கொண்டிருக்க வேண்டும். மேலும், தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு தங்களுடைய திறன்கள் முழுவதையும் ஈடுபடுத்த வேண்டும். எனவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சட்டபூர்வமான கட்சியாக இயங்கலாம். பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும் அதனுடைய பத்திரிகைகள் மீதும் விதிக்கப்பட்டுள்ள தடைகளை முற்றாக நீக்குவது என்று இதன் மூலம் முடிவு செய்துள்ளது'' என்று அறிவித்தது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த அறிவிப்புக்கு பின்னர் சிறையில் இருந்த கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்யப்பட்டனர். தலைமறைவாக வாழ்ந்த தலைவர்கள் வெளியில் வந்தனர். 1942 செப்டம்பர் மாதம் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விரிவடைந்த மத்திய குழு (பிளீனம்) கூட்டத்தில் ''தேச பாதுகாப்பிற்கு தேசிய அரசு வேண்டும்'' ''தேசிய அரசுக்கு தேசிய ஒற்றுமை வேண்டும்'' என்ற முழக்கத்துடன் கட்சியின் முதல் மாநாட்டுக்கான தயாரிப்புகளை செய்ய தொடங்கியது.

கூறியதாவது;

தோழர்களே, எட்டு ஆண்டு காலம் சட்ட விரோதமாகவும், தலைமறைவாகவும் செயல்பட்டு வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இப்பொழுது தான் முதன்முதலாக சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு முதல் அகில இந்திய மாநட்டை நடத்துகிறது.

நமது கட்சியின் மாநாடு மிகவும் பொறுப்பு மிக்க சந்தர்ப்பத்தில் கூடுகிறது, சுதந்திர உலகத்தில் சுதந்திர இந்தியாவை நிர்ணயிக்கக் கூடிய யுத்தம் தற்போது இறுதி கட்டத்தை அடைந்து விட்டது.

பாசிச சக்திகளையும், உலக பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்து தற்போது உலகம் முழுவதும் நடைபெறும் மக்கள் யுத்தத்தில் சோவியத் யூனியன், சீனா, பிரட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் நமது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் போர்க்களத்தில் நிற்கிறது.

நமது கட்சி ஒன்றுதான் இந்தியாவின் பாதுகாப்பிற்கும், இந்திய மக்களின் விடுதலைக்கும் நமது நாட்டில் அனைத்து தரப்பு மக்களையும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்தி வருகிறது. எனவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்துவது ஒவ்வொரு தேச பக்தரின் கடமையாகும்.

நமது கட்சி நிச்சயம் வெற்றிபெறும், மாமேதை லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் கட்சி நம்முடைய கட்சி, மேலும், இந்தியாவின் கையூர் தியாகிகளை போல, ருஷ்யாவின் ஸ்டாலின் கிராட் வீரர்களை போன்று திகழ்பவர்கள் நமது கட்சி தோழர்கள்.

உலகில், பாசிசத்தை வீழ்த்தி வெற்றி பெறவும், இந்தியாவில் விடுதலைபெறவும் நாம் முன்னேறுவோம். இந்த மக்கள் யுத்தத்தில் உலக மக்களோடு நாமும் தோளோடு தோள் நின்று பணியாற்றுவோம். மேலும், மேலும், பலம் பெறுவோம். ''லால் சலாம்'' என்று அறை கூவல் விடுத்தார்.

தொடர்புக்கு: 9442736668

தொடர்ச்சி அடுத்த இதழில்...

# அமிர்த காலத்தில் அலை அலையாக வெளியேறும் இந்தியர்கள்!



த.லெனின்

**நான் பிரதமர் ஆனால் இந்திய விசா வாங்க அமெரிக்கர்கள் க்யூவில் நிற்பார்கள்! 30 ரூபாய்க்கு ஒரு டாலர் என்ற அளவில் ரூபாயின் மதிப்பை உயர்த்துவேன் என்று கடந்த 2013 இல் விஸ்வகுரு மோடி சொன்னது. ஆனால் நடப்பது வேறு!**

கடந்த பத்தாண்டுகளில் ஆண்டுதோறும், சராசரியாக ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியக் குடியுரிமையைத் துறந்து, வெளிநாட்டில் குடியேறுவதாக இந்திய அரசு புள்ளிவிவரங்களை வெளியிட்டுவந்தது. ஆனால், குடியுரிமையைத் துறந்த இந்தியக் குடிமக்கள் குறித்த கேள்விகளுக்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்து மூலமாக நாடாளுமன்றத்தில் பதிலளித்தார். அதில், ‘2023ம் ஆண்டில் 2.16 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் தங்கள் குடியுரிமையைத் துறந்திருக்கிறார்கள்’ என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவைக் காட்டிலும் பல அம்சங்களில் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் தங்களின் பொருளாதாரத்துக்கும், வணிகத்துக்கும், சொகுசு வாழ்க்கைக்கும் வாய்ப்பாக இருப்பதாக அவர்கள் பார்க்கிறார்கள். உதாரணமாக, ‘இந்திய பாஸ்போர்ட் மூலமாக விசா இல்லாமல் ஆசியா, ஆப்பிரிக்காவின் 57 நாடுகளுக்கு மட்டுமே செல்ல முடியும். ஆனால் அதுவே, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பாஸ்போர்ட் மூலம் 150 நாடுகளுக்குச் செல்ல முடியும்.

## பாரா முகமாகும் பாரத் மாதா!

பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களில் ஒரு பகுதியினர்தான் இவ்வாறு குடியுரிமையைத் துறந்துவிட்டு வேறு நாடுகளில் குடியேறுகிறார்கள். இதனால், இந்தியாவுக்குப் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த விவகாரத்தால், அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் வரிவருவாய் பாதிப்பைச் சந்திக்கும் என்று அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

சாதாரண ஏழை எளிய அன்றாடம் காய்ச்சிகளுக்கு பாரத் மாதா! உயர் அடுக்கில் இருப்பவருக்கோ வெளிநாட்டு மாதா!

குடியுரிமையைத் துறந்த இந்தியர்களில் பலர் மிகவும் திறமையானவர்கள், படித்தவர்கள், திறன் மிக்க தொழிலாளர்கள். அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவது நமது பொருளாதாரத்தில் மட்டுமின்றி வளர்ச்சியிலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். கடந்த மூன்று ஆண்டுகளில் பெரும் கோடீஸ்வரர்கள் 17,000 பேர் இந்தியாவிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். தொழில் முனைவதற்கான சிறப்பான வாய்ப்புகள் உருவாக்கப்படாததால்தான் இவர்கள் இப்படி உதறித் தள்ளிவிட்டு வெளிநாடு பறக்கிறார்கள்.


## அதிக எண்ணிக்கையில் புலம்பெயரும் இந்தியர்கள்!

புலம்பெயரா புனல் நாடு! என்று காவிரி தீரத்தை சிலப்பதிகாரம் வருணிக்கிறது. ஆனால் இன்று உலகளாவிய இடம்பெயர்வில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. வெளியுறவு அமைச்சக அறிக்கையின்படி, ஒரு கோடியே 36 லட்சம் வெளிநாட்டு இந்தியர்கள் (NRI) சுமார் இரண்டு கோடி இந்திய வம்சாவளியினர் (PIO) மற்றும் கிட்டத்தட்ட 3 கோடியே 23 லட்சம் வெளிநாட்டு இந்தியக் குடிமக்கள் (OCI) இந்தியாவிற்கு வெளியே வசிக்கின்றனர். மேலும் வெளிநாட்டு இந்தியர்கள் உலகின் மிகப்பெரிய வெளிநாட்டுப் புலம்பெயர்ந்தோர் ஆவர். ஒவ்வொரு ஆண்டும், 25 லட்சம் இந்தியர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்கின்றனர். இது உலகின் மிக அதிகமான வருடாந்திரப் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையாகும்.

2021 மற்றும் 2022 ஆகிய இரண்டிலும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) நாடுகளுக்கு இடம்பெயர்ந்தோரின் முன்னணி ஆதாரமாக இந்தியாவை சர்வதேச இடம்பெயர்வு அவுட்லுக் 2023 குறிப்பிட்டுள்ளது என்பது வெளிப்படையானது.

கடந்த 2003 ம் ஆண்டு வேலைவாய்ப்புக்காக அமெரிக்கா சென்றிருந்த ஒருவர். பிடித்துப் போனதால் அங்கேயே குடியேற முடிவு செய்தார். அவரது மகள் அங்குதான் பிறந்தார். பின்னர் அவர் கிரீன் கார்டுக்கு விண்ணப்பித்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றார்.

இங்கு வாழ்க்கை மிகவும் எளிதாக உள்ளது. வாழ்க்கைத் தரம் மிகவும் நன்றாக உள்ளது. குழந்தைகள் நன்றாகப் படிக்கிறார்கள். மேலும், பணிச்சூழல் மிகவும் நன்றாக உள்ளது. நீங்கள் செய்யும் வேலையின் அளவிற்கு ஏற்ப உங்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது. சட்ட ரீதியாகவே எந்த ஒரு வேலைக்கும் ஒரு மணி நேரத்திற்கு 15 டாலர் குறைந்தபட்சக் கூலியாக அங்கே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் அப்படியான ஊதியப் பாதுகாப்புகள், சமூக உத்தரவாதங்கள் இல்லை. எனவே இந்தியாவை விடச் சிறந்த வாய்ப்புகள் எங்கு கிடைக்கிறதோ அங்கு குடியேறுகிறார்கள் என்பதுதான் உண்மை! டிரம்ப் ஆட்சிக்குப் பிறகு இதில் பிரச்சனை வந்தாலும் இது தொடர்கிறது.



## இந்தியாவே வேண்டாம்! என்ன காரணம்?

வெளிநாட்டில் வாழ்வதால் பல நன்மைகள் உள்ளன என்று கருதுகின்றனர்.

தனது குடியுரிமை கைவிடுவது அல்லது ‘ப்ரெயின் ட்ரெயினை’ அதாவது திறன்மிக்க மூளை வெளியேற்றத்தை கட்டுப்படுத்த இந்தியா விரும்பினால், அது பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் கூறுகிறார்கள். புதிய வேலைவாய்ப்புகள், சமூகப் பதற்றமின்மை, மதக் கலவரங்கள் அற்ற வாழ்க்கை, மேம்பட்ட வசதிகள், மகிழ்ச்சியான வாழ்க்கை முறை போன்றவற்றை இந்தியா கருத்தில் கொள்வது அவசியம் என்கிறார் அவர். ஆனால் இவர்களுக்கோ வெறுப்புப் பிரச்சாரம், மதவெறி, உணவில் கூட அரசியல் என்று அனைத்திலும் பாசிசத் தன்மையோடு செயல்பட்டு பொருளாதார நன்மைகள் அனைத்தும் பெரும் நிறுவனங்களுக்கும், வசதி படைத்தவர்களுக்கும் வாரி வழங்கும் ஒரு ஏற்பாட்டைத்தான் செய்து வருகிறார்கள்

## பாதுகாப்பான பணியிடச் சூழல்!

கனடாவில் வசிக்கும் 25 வயதான அபினவ் ஆனந்த், இதே கருத்தைக் கொண்டுள்ளார். அங்கு படிப்பை முடித்த அவர் கடந்த ஓராண்டாக வேலை பார்த்து வருகிறார். அவர் இன்னும் இந்திய பாஸ்போர்ட்டைத்தான் பயன்படுத்துகிறார். ஆனால் இந்தியக் குடியுரிமையை விரைவில் கைவிடத் தயாராக உள்ளார்.

நல்ல பணிச்சூழல் இதற்கு ஒரு காரணம் என்று அவர் கூறுகிறார். எனவே அவர் இந்தியாவுக்குத் திரும்பிவர விரும்பவில்லை. வேலை நேரம் இங்கே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணியிடத்தில் விதிகள் மற்றும் சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. நீங்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப உங்களுக்கு ஊதியம் கிடைக்கும். இந்தியாவில் இதற்கான விதிகள் அவ்வளவு சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. அதனால் நான் வேலைக்காக அங்கு செல்ல விரும்பவில்லை. வேறு ஒரு நாட்டில் இருந்துகொண்டு வேலை செய்யவேண்டும் என்றால் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெறுவதில் என்ன தவறு? என்று அவர் வினவுகிறார்.

இப்படி அடிப்படை வசதிகள் உருவாக்காத நாட்டை விட்டு, நல்ல வேலை, அதிகச் சம்பளம் மற்றும் சிறந்த வாழ்க்கையைத் தேடி பெரும்பாலான மக்கள் வெளியேறுகிறார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

பெரிய நாடுகளில் சிறந்த வசதிகள் உள்ளன. ஆனால் பலர் சிறிய நாடுகளுக்கும் செல்கின்றனர். பல சிறிய நாடுகள் வர்த்தகத்திற்காகச் சிறந்த வசதிகளை வழங்குகின்றன. பலரின் குடும்பங்கள் அத்தகைய நாடுகளில் குடியேறியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இடம் பெயரும் பெரும் பணக்காரர்கள்!

வாய்ப்புகள் அனைத்தும் பெரும் பணக்காரர்களுக்கே வாரி வழங்கினாலும் அவர்களும் இப்போது இந்தியாவில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஒரு முன்னணி உலகளாவிய முதலீட்டு இடப்பெயர்வு ஆலோசனை நிறுவனம், கடந்த மூன்று ஆண்டுகளில் 17,000க்கும் மேற்பட்ட மில்லியனர்கள் (மொத்தச் சொத்துக்கள் $1 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளவர்கள்) இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறுகிறது. 2014 இல் இருந்து இன்றுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெரும் பணக்காரர்கள் இப்படி வெளியேறி உள்ளனர். இந்த 2025 ஆம் ஆண்டு மட்டும் இதுவரை 3500 கோடீஸ்வரர்கள் வெளியேறி உள்ளனர். அவர்களது சொத்து மதிப்பு மட்டும் 2 லட்சத்து 18,400 கோடியாகும்.

## அதானி, அம்பானிகளுக்கு மட்டுமே எல்லாம் என்ற எழுதப்படாத சட்டம்.

உயர் திறமையான மற்றும் அதிக நிகரச் சொத்து மதிப்புள்ள இந்தியர்கள் வெளியேறுகின்றனர். கடந்த பத்தாண்டுகளில் பெருநிறுவனங்களைச் சுற்றியுள்ள ஒட்டுமொத்த பயம், ஈ.டியைப் பயன்படுத்தித் தேர்தல் பத்திரங்கள் வாங்க மிரட்டல். இப்படி முற்றிலும் மாறுபட்ட, தெளிவற்ற வரிக் கொள்கைகள், தன்னிச்சையான வரி நிர்வாகத்தின் விளைவாகக் கூட இந்த வெளியேற்றம் இருக்கலாம்.

## அமிர்தம் அல்ல விஷம்!

இந்தியாவின் பிரச்சனை என்பது செல்வம், சரியான முறையில் பங்கீடு செய்யப்படாததே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகிறது. ஒரு பக்கம் அமிர்தகாலம் என்று மோடி பரப்புரை மேற்கொள்கிறார். இந்தக் காலத்தில்தான் தங்களது குடியுரிமையை துறந்து இந்தியர்கள் வெளியேறி வருகிறார்கள். வேலையற்றோர் தப்பித்துக் கொள்ள வெளிநாடு செல்கின்றனர். பணக்காரர்கள் வெளியேறி வெறிச்சோடி வருகிறது. மொத்தத்தில் இந்தியா சரிந்து விழுந்து வருகிறது! இது அமிர்தகாலம் அல்ல ஆலகால விஷங்களின் காலம் ஆர்த்தெழுந்து போராடி முறியடிப்போம்!

**தொடர்புக்கு: 9444481703**

## ஆண்டு வாரியாக குடியுரிமை துறந்த இந்தியர்கள்

அரசாங்கத் தரவுகளின்படி, கடந்த 11 ஆண்டுகளில் இந்தியக் குடியுரிமையைத் துறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 23 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியக் குடியுரிமையைத் துறந்துள்ளனர். இதில் டெல்லி முதலிடத்தைப் பிடிக்கிறது மூன்றாவது இடத்தில் மோடியின் குஜராத்திகள்தான் உள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் இந்தியக் குடியுரிமையைக் கைவிட்ட இந்தியர்களின் எண்ணிக்கை 1,31,489 என்றும், 2016 ஆம் ஆண்டில் 1,41,603 பேரும், 2017 ஆம் ஆண்டில் 1,33,049 பேரும் குடியுரிமையைக் கைவிட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

2018 ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை 1,34,561 ஆகவும், 2019 ஆம் ஆண்டில் 1,44,017 ஆகவும், 2020 ஆம் ஆண்டில் 85,256 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 1,63,370 ஆகவும் தங்கள் குடியுரிமையைத் துறந்தனர். 2022 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2,25,620 ஆக இருந்ததாக அமைச்சர் தெரிவித்தார். 2023 ஆண்டு இந்த எண்ணிக்கை 2,16,219 பேராகும். இதற்குப் பிந்திய ஆண்டுகளுக்கான தரவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 10 ஆயிரம் பள்ளிகளை மூடும் உத்தரப்பிரதேச பாஜக அரசு

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மோடி அரசின் தேசியக் கல்விக் கொள்கை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி, குறைந்த மாணவர் சேர்க்கை கொண்ட பள்ளிகளை மூடிவிட்டு. அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைக்கும் முயற்சியை யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக அரசு மேற்கொண்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில், ஏறத்தாழ 29 ஆயிரம் பள்ளிகளில் 50க்கும் குறைவான மாணவர்களே உள்ளனர். இந்தப் பள்ளிகளை அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைப்பது என்ற பெயரில், 10 ஆயிரம் பள்ளிகளை மூட உத்தரப்பிரதேச அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் பல லட்சம் குழந்தைகள் வேறு பள்ளிகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று 27 ஆயிரம் பள்ளிகளை மூட அரசு திட்டமிட்டுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அரசுப் பள்ளிகளை மூடும் பாஜக அரசின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. பல்வேறு அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன. கல்வியை அடிப்படை உரிமையாக்கி, அனைவருக்கும் கல்வி வழங்கிய நாடுகளே முன்னேற்றம் அடைந்துள்ளன. வளர்ச்சிக்கு கல்வி அடிப்படையாக இருக்கிறது. ஆனால் பாஜகவின் கொள்கைகள் இதற்கு எதிராக இருப்பதுடன், அனைவருக்கும் கல்வி அளிப்பதிலும் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கும் முட்டுக்கட்டை போடுவதாக கல்வியாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். பள்ளிகளை மூடும் உத்தரப்பிரதேச அரசின் நடவடிக்கைக்கு தடை விதிக்க கோரி உச்சநீதிமன்றத்தையும் கல்வியாளர்கள் நாடியுள்ளனர். உச்சநீதிமன்றமும் அவசர வழக்காக விசாரிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

## துணைவேந்தர்களை நியமிக்கும் ஆளுநரின் உத்தரவு செல்லாது

### கேரள உயர்நீதிமன்றம் தீர்ப்பு




கேரளாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மாநில அரசு பரிந்துரைத்தவர்களில் ஒருவரை தேர்வு செய்யாமல், தன் விருப்பப்படி முன்னாள் ஆளுநர் ஆரிப் முகமது கான் நியமித்தார். இதற்கு எதிராக கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதில் தனிநீதிபதி அளித்த உத்தரவுக்கு எதிராக கூடுதல் அமர்வில் துணைவேந்தர்கள் மேல்முறையீடு செய்தனர்.

இதனை விசாரித்து வந்த கேரள உயர்நீதிமன்ற கூடுதல் அமர்வு, கேரளத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் முன்னாள் ஆளுநர் ஆரிப் முகமது கான் தற்காலிக துணைவேந்தர்களை நியமித்தது செல்லாது என தீர்ப்பளித்துள்ளது. அரசு பரிந்துரைக்கும் பட்டியலில் இருந்துதான் துணைவேந்தர்களை நியமனம் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பின் மூலம் ஆளுநர் நியமனம் செய்த தற்காலிக துணைவேந்தர்கள் சிஸா தாமஸ், சிவபிரசாத் ஆகியோர் உடனடியாக பதவி விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## பாலஸ்தீனர்கள் 800 பேர் படுகொலை

### உணவின்றித் தவித்த போது இஸ்ரேல் அட்டூழியம்

காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனர்களுக்கு உணவு, மருந்து, தண்ணீர் உட்பட உயிர்ப்பொருட்கள் கிடைக்காமல் இஸ்ரேலும் அமெரிக்காவும் தடுத்து வருகிறது. இதனால் ஏற்படும் உணவுத் தட்டுப்பாடும் பட்டினியும் ஏற்பட்டு பலர் மடிந்து வருகின்றனர். பட்டினியை இனப்படுகொலைக்கான ஆயுதமாக இஸ்ரேலும் அமெரிக்காவும் பயன்படுத்தி வருகின்றன.

காசாவில் உள்ள நிவாரண முகாம்களில் பாலஸ்தீனர்கள் உணவு வாங்கும் போது, இஸ்ரேல் ராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மட்டும் ஏறத்தாழ 800 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனை ஐ.நா. மனித உரிமை ஆணையமும் உறுதிப்படுத்தியுள்ளது. ‘‘காசாவில் நிவாரண முகாம்கள் உள்ள பகுதிகளில் மட்டும் ஜூலை 7 ஆம் தேதி வரை, ஏறத்தாழ 798 பாலஸ்தீனர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை எங்கள் அமைப்பு ஆவணப்படுத்தியுள்ளது’’ என்று ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ரவீனா ஷம்தாசானி தெரிவித்தார்.

ஜூலை 7க்குப் பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு வெளியிடவில்லை. ஆனால், நாளொன்றுக்கு காசா முழுவதும் ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர்.

# தமிழ்நாட்டில் தி



டி.எம்.மூர்த்தி

**வெவ்வேறு ஊர்களில் மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, நானும் உடனிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.**



தமிழ்நாட்டுப் பிரச்சனைகள், தொழிலாளர்கள் விவசாயிகள் பிரச்சனைகள், ஒன்றிய அரசின் ஓரவஞ்சகம் பற்றி எல்லாம் இந்தக் கூட்டங்களில் அவர் விரிவாகப் பேசினார்.

கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள் என்று சொன்னதுதான் தாமதம். ஒரு பத்திரிகையாளர் ‘‘வருகிற சட்டமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு எத்தனை சீட் கேட்கப் போகிறீர்கள்?’’ என்று கேட்டார்.

நீங்கள் எந்தப் பத்திரிகையில் இருந்து வருகிறீர்கள் என்று அண்ணாமலை சீமான் போல மாநிலச் செயலாளர் சீறவில்லை. ‘‘அதைத் தேர்தல் நெருங்கும் போது பார்த்துக் கொள்ளலாம்’’ என்று பதிலளித்தார்.

அந்த ஊடகச் சங்கி விடவில்லை. ‘‘இல்லை! உங்கள் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகள் எல்லாம் கூடுதல் தொகுதி வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள்! நீங்களும் அவ்வாறு கேட்பீர்களா’’ என்ற அடுத்த கேள்வி வந்தது. ‘‘தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தை நடக்கும்போது அங்கு கேட்போம்’’ என்றே பதில் வந்தது.

மூன்று ஊர்களிலும் இதேதான் கேள்வி. ஒருவேளை கூடுதலாகக் கேட்போம் என்றோ அல்லது எண்ணிக்கையோ முத்தரசன் கூறியிருந்தால், அது தலைப்புச் செய்திகளில் வந்திருக்கும்.

அவர் சொன்ன அத்தனை பிரச்சனைகளையும் விட்டுவிட்டு எதற்காக இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது?

தலைகீழாய் நின்று தண்ணீர் குடித்தாலும், தன்னால் தமிழ்நாட்டு ஆட்சிக்கு வர முடியாது என்பது பாஜகவுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் அரசியலில் ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்கினால்தான், எதிர்காலத்திலாவது முன்னே நகர்வதற்கான ஒரு வாய்ப்பாவது கிடைக்கும்.

நிலையற்ற தன்மை தமிழ்நாட்டில் உருவாக வேண்டும் என்றால் திமுகவை ஆட்சிப் பொறுப்பில் இருந்து இறக்க வேண்டும். திமுக கூட்டணி வலிமையோடு இருக்கும் வரை, அது நடக்காது. எனவே திமுக கூட்டணியை உடைக்க வேண்டும்.

பாஜகவோடு அணிசேர, மக்களை நேசிக்கும் எந்தக் கட்சியும் போகாது.

எனவே, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ‘‘நான் எந்தக் காலத்திலும் பிஜேபியோடு கூட்டணி சேர மாட்டேன். திமுக கூட்டணியில் இருந்து கட்சிகள் விலகி தன்னிடம் வரும். புதிய கூட்டணி அமைப்போம்’’ என்று ஒரு ஆறு மாத காலத்துக்கு முன்னால் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தார்.

சரியான நேரம் பார்த்து, ஒரு போடு போட்டு தன் வலையில் அதிமுகவை வீழ்த்தியது பிஜேபி.

ரசிகர்களை நம்பி கட்சி ஆரம்பித்து, களத்திலேயே கால் பதிக்காமலேயே வெற்றிக்கோட்டைத் தொட்டு விடத் துடிக்கும் நடிகர் விஜய், ‘‘என்னோடு கூட்டணி சேரும் கட்சிகளுக்கு, ஆட்சியில் பங்கு தருவேன்’’ என்று மாநாடு கூட்டி அழைப்பு விடுத்துப் பார்த்தார்.

வழக்கமாக சினிமாக்களில் அவர்தான் நக்கல் நையாண்டி செய்வார். மக்கள் அதை அவருக்கே திருப்பிச் செய்து காட்டினார்கள். அவரது சினிமாக்களுக்கு மட்டுமல்ல அரசியலுக்கும் டைரக்டர் இருக்கிறார். இந்த நடிகரை இயக்கும் அரசியல் டைரக்டர் யார் என்பதும் மக்களுக்குத் தெரியும். பாஜக அனுப்பி வைத்த ஆட்கள் தானே அவரது கட்சியின் முக்கிய நிர்வாகிகளாக இருக்கிறார்கள்!

அமித்ஷா அடிக்கடி தமிழ்நாடு வருகிறார். திமுக ஆட்சி என்னென்ன ஊழல்களில் ஈடுபட்டு இருக்கிறது என்று தொகையோடு பட்டியல் போட்டு பேசினார்.

‘‘இவ்வளவு விவரம் திரட்டிய ஒன்றிய அரசு, ஊழல் செய்தவர்கள் மீது வழக்கு போட வேண்டியதுதானே’’ என்று மக்கள் கேட்டார்கள்.

ஏற்கெனவே இப்படிப் புனைந்து போட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் ஓட்டையைப் போட்டு விட்டது என்பதையும், மாநில ஆளுநரைக் கொண்டு மாநில அரசுக்கு எதிராகப் பட்டாசு வெடித்ததில், உச்சநீதிமன்றமே தலையிட்டு தண்ணீரை ஊற்றி அணைத்ததோடு நில்லாமல், குடியரசு தலைவருக்கும் வழிகாட்டுதல் தந்து விட்டது என்பதையும் எப்படி அமித்ஷாவால் பகிரங்கமாகச் சொல்ல முடியும்? பாவம்!

எடப்பாடியை இழுத்துப் போட்ட பின்னாலும், தனது கூட்டணியை இறுக்கமாக்கிக் கொள்ள பிஜேபியால் முடியவில்லை.

அதிமுகவில் இருந்து விலக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான, ஜெயலலிதாவுக்குப் பின் கட்சியைத் கண் பிடிக்குள் வைத்திருந்த சசிகலா, அவரது உறவினரான டிடிவி தினகரன் போன்றவர்கள்

## சத்தியமங்கலத்தில் வீட்டுமனைப் பட்டா கே

சத்தியமங்கலத்தில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் 5000க்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டா கோரிக்கைகளுக்குத் தீர்வு காணக் கோரி சத்தியமங்கலம் வட்டாட்சியரிடம் பெருந்திரள் முறையீடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

சத்தியமங்கலம் நகராட்சியில் பட்டா பெற்றவர்களுக்கான இடம் வேறு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் அந்தப் பட்டாதாரர்களுக்கு மாற்றிடம் வழங்க வேண்டும். பட்டா பெற்றவர்களுக்கு இடத்தை அளந்து காட்ட வேண்டும், குடியிருக்கும் இடத்திற்குப் பட்டா வழங்க வேண்டும். ஏற்கெனவே வழங்கப்பட்ட பழைய பட்டாக்களுக்குப் பதிலாகப் புதிய கம்ப்யூட்டர் பட்டா சிட்டா ஆர்.எஸ்.ஆர் வழங்க வேண்டும். கூட்டுப் பட்டாக்களைத் தனிப்பட்டதாக மாற்று வழங்க வேண்டும். புதிதாக வீடு கட்ட இடம் கேட்பவர்களுக்கு இடம் ஒதுக்கிப் பட்டா வழங்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர்



# ...முக கூட்டணி உடையுமா?



தனித்தனி குழுக்களாக நிற்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒன்றாய்ச் சேர்க்க இதுவரை பிஜேபியால் முடியவில்லை.

அமலாக்கத்துறை வருமானவரித்துறையின் அடி தாங்காமல், பிஜேபியோடு கூட்டு சேர்ந்த எடப்பாடி பழனிசாமி "கோவில் உண்டியலில் போடும் காசை எடுத்து, இந்து சமய அறநிலையத்துறை பள்ளிக்கூடங்கள் கல்லூரி கட்டுவது எப்படிங்க நியாயம்?' என்று சங்கிகளைக் காட்டிலும் தீவிரமாக தொண்டை வறளக் கத்துவதை அதிமுக தொண்டர்களே ஒத்துக் கொள்ளவில்லை. அவர்களோடு சேர்ந்து நிற்கும் அதிமுக தலைவர்களும், எடப்பாடியை விட்டு ஒதுங்கியே நிற்கிறார்கள்.

அதிமுகவின் நிறுவனரான எம்ஜிஆரும், அவரைத் தொடர்ந்த ஜெயலலிதாவும், மாநில உரிமைகளுக்காக ஒன்றிய அரசை எதிர்த்துப் போராடத் தயங்கியது இல்லை.

தமிழ்நாட்டில் கூட்டணி அரசு என்று அமித்ஷா கூற, சேக்கிழார் எழுதியது கம்பராமாயணம் என்று கண்டுபிடித்த தமிழ் அறிஞர் எடப்பாடி, கூட்டணி ஆட்சி வேறு, கூட்டணி அரசு வேறு என்று பதவுரை, பொழிப்புரை, விரிவுரை எல்லாம் எழுதிக் கொண்டிருந்தார்.

பாஜகவும் பங்கேற்கும் கூட்டணி ஆட்சிதான், முதல்வர் யார் என்பதையே அமித்ஷாதான் நிர்ண யிப்பார் என்று சொல்லி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் எடப்பாடிக்கு ஆப்பு வைக்கிறார்.

"கூட்டணி விவகாரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்வதே எங்களுக்கு வேதவாக்கு, அமித்ஷாவின் முடிவே இறுதியானது" என ஒன்றிய அமைச்சர் எல்.முருகன் தெளிவாக உறுதிப்படுத்துகிறார்.

வன்னியர் சமூகத்திடம் பிடிப்புள்ள பாட்டாளி மக்கள் கட்சியைத் தன் கூட்டணிக்குள் இழுக்க பிஜேபி முனைகிறது. நிறுவனரான ராமதாஸ் ஒரு குழுவாகவும், அவரது மகனான முன்னாள் ஒன்றிய அமைச்சர் அன்புமணி இன்னொரு குழுவாகவும் போட்டுக் கொள்ளும் சண்டை ஊடகங்களில் தினந்தோறும் வருகிறது.

கட்சிகளை உடைக்கும் வல்லமை பிஜேபிக்கு உண்டுதான். ஆனால் அந்தக் கட்சியைக் கொத்தாகத் தூக்கி வர முடியாது எனும் போது, திமுகவுக்கு எதிர் வாக்குகளை எல்லாம் ஓரணியாகத் திரட்டும் வாய்ப்பு பறிபோகிறது.

எனவே தனது பலவீனங்கள் வெளியே பேசப்படாமல் இருக்க, திமுக கூட்டணி உடையப் போகிறது என்று பெரும் குரல் எடுத்து ஒப்பாரி வைக்கிறது பிஜேபி.

குறைந்தபட்சம் திமுக கூட்டணி உடைந்து விடும் என்று எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவு காலத்திற்கு மக்களைக் குழப்ப வேண்டும்.

தமிழ்நாட்டில் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு பரிதாபமாகத் தோற்றாலும், ஒன்றிய அமைச்சராக வலம் வரும் எல்.முருகன், அவ்வப்போது அறிக்கை விட்டுக் கொண்டே இருக்கிறார்.

தி.மு.க., கூட்டணியில் இருந்து எப்போது விலகி ஓடலாம் என்று திருமா தயாராக இருக்கிறார்; கம்யூனிஸ்ட்டுகள் தினமும் அரசை விமர்சிக்கிறார்கள். அந்தக் கூட்டணி சுக்கு நூறாக உடையப் போகிறது.

திமுக அரசு நடத்தப்படும் விதத்தில் கூட்டணிக் கட்சிகளுக்குச் சில கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன. அவற்றை எந்த வகையில் அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது அவற்றுக்குத் தெரியும். அது மட்டுமல்ல, கூட்டணிக் கட்சிகள் சொல்கிற விஷயங்களை ஆதிக்கத்தோடு பார்க்காமல், அவை கூறும் கருத்தைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கைகளை எடுக்கும் பண்பு திமுகவுக்கு இருக்கிறது.

எட்டு மணி நேர வேலையை 12 மணி நேரத்துக்கு அதிகமாக மாற்றுவதற்குச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு, கூட்டணிக் கட்சிகள் சொன்ன கருத்தை ஏற்று திமுக அரசு திரும்பப் பெற்றது இதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மத நல்லிணக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்ச் சமூகம், மதவெறி கொண்ட பிஜேபியை மனதார ஏற்காது.

வல்லூறு வாய் பிளந்து வானத்தில் சுற்றும் வரை, தாய்க்கோழி தன் குஞ்சுகளை விட்டு எங்கும் ஓடி விடாது. தன் ஆற்றலை எல்லாம் திரட்டி வலிமை கூடிய வல்லூறையும் எதிர்க்கும், விரட்டியடிக்கும்.

வேறு சில மாநிலங்களில் நடப்பது போல, எது எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை, என்னை முதலமைச்சராக ஏற்றுக் கொண்டால் கூட்டு, இல்லையேல் வேட்டு என்று அணுகுமுறை தமிழ்நாட்டில் இல்லை.

ஆர்எஸ்எஸ் பிஜேபியோ அல்லது அதன் பினாமிகளோ தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அபாயம் முற்றாக நீங்கும் வரை, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி உடையப்போவதில்லை.

**தொடர்புக்கு: 7397130367**

# ...டு வட்டாட்சியரிடம் பெருந்திரள் முறையீடு



நலத்துறை மூலம் வழங்கப்பட்ட பட்டாவிற்கு வருவாய்த் துறை மூலம் கணினி இ – பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்களுடன் பயனாளிகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். குறிப்பாக பவானிசாகர் வட்டாரம், சத்தியமங்கலம் வட்டாரம், சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதி பயனாளிகள் சுமார் 2000 பேர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன் குமார், துணைச் செயலாளர் கே.சக்திவேல், ஒன்றியச் செயலாளர்கள் எம்.சுரேந்தர், ஐ.எஸ்.சிவராஜ், ரவிக்குமார், ரமேஷ், மகேஷ், விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.மகேந்திரன், மாவட்டச் செயலாளர் சி.கே.முருகன், தொழிற்சங்கத் தலைவர்கள் இரா.ஸ்டாலின் சிவகுமார், எஸ்.சி.நடராஜ், பி.ஏ.வேலுமணி, மு.சரவணகுமார் உள்ளிட்டோர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

# உழைக்கும் மக்கள் மாமன்ற மாநாடு






உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றத்தின் 35வது மாநாடு, கோவை பிருந்தாவன் மண்டபத்தில் ஜூலை 13ம் நாளில் நடைபெற்றது. சங்கத் தலைவர் ஆர்.குசேலரின் 90வது பிறந்தநாள் இணைத்துக் கொண்டாடப்பட்டது.

சங்கத்தை ஏஐடியுசியுடன் இணைப்பது என்று தீர்மானித்த பின்பு நடைபெறும் முதலாவது மாநாடு இதுவாகும். மாநாட்டுக்கு மூத்த தலைவர் ஆர்.குசேலர் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஆர்.சம்பத் வரவேற்புரை ஆற்ற, பொதுச் செயலாளர் நா.துரைராஜ் அறிக்கை சமர்ப்பித்தார்.

மாநாட்டை வாழ்த்தி ஏஐடியுசி தேசியச் செயலாளர் டி.எம். மூர்த்தி, இண்டஸ்ட்ரி ஆல் அமைப்பின் மண்டலச் செயலாளர் அசுதோஷ் ஆகியோர் பேசினார்கள்.

தொடர்ந்து நடந்த குசேலர் பிறந்த நாள் விழாவில், முன்னாள் நிதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சிதம்பரம், எல்.எம்.டபிள்யூ குழுமத் தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு ஆகியோர் உரையாற்றினர்.

மாநாடு தொடங்கும் முன்பாக சின்னியம்பாளையம் தியாகிகள் நினைவிடத்தில், ஆர்.குசேலர், டி.எம்.மூர்த்தி ஆகியோர் உள்ளிட்ட ஏராளமான தொழிலாளர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# உலக புராதனச் சின்னமாக செஞ்சிக்கோட்டை அறிவிப்பு



உலக அளவில் புராதனமான இடங்களை ஆய்வு செய்து, அவற்றை உலக புராதன சின்னமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்து வருகிறது. தற்போது, மகாராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜி ஆட்சி செய்த 11 கோட்டைகள், தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கோட்டை ஆகியவற்றை உலக புராதனச் சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இதனை சுற்றுலா பயணிகள், சமூக ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர். இதுதொடர்பாக கடந்த ஆண்டு, யுனெஸ்கோ பிரதிநிதிகள், ஒன்றிய அரசு மற்றும் இந்திய தொல்லியல் துறை அதிகாரிகள் செஞ்சிக் கோட்டையில் ஆய்வு செய்தனர்.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோவில், மாமல்லபுரம் சிற்பங்கள், நீலகிரி மலை ரயில், கும்பகோணம் ஜராதீஸ்வரர் கோவில் ஆகியவை புராதன நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# குடியுரிமையைத் தேர்தல் ஆணையம் பறிக்க முடியாது



மே.து.ரா.

**பீகார் சட்டப் பேரவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு முனைப்புத் திருத்தப் பணிகளைத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டிருப்பது பல அய்யங்களைக் கிளப்பியுள்ளது.**

கடந்த 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் இத்தகைய சிறப்பு முனைப்புத் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### வாக்குரிமையைப் பறிக்கும் தேர்தல் ஆணையம்

2003ஆம் ஆண்டிற்குப் பின்னர் வாக்காளராகப் பதிவு செய்துகொண்டோர் அனைவரும், தாங்கள் இந்திய ஒன்றியத்தின் குடிமக்கள் என்பதைத் தக்க சான்றுகளுடன் உறுதிப்படுத்தவேண்டும் என்ற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

இதற்குப் பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு போன்ற ஆவணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், ஆதார், இல்ல அட்டை ஆகியவற்றை அடிப்படைகளாக ஏற்கத் தேர்தல் ஆணையம் மறுக்கிறது.

இதனால், தகுதியுள்ளோர் வாக்குரிமைகள் பறிபோகும் நிலை ஏற்பட்டு, நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறுவது சீர்குலையும் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

### உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரை

ராட்ரிய சனதா தளம், திரிணமூல் காங்கிரசு போன்ற கட்சிகள் இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்தன.

வாக்காளராக ஒருவரைப் பதிவு செய்யும்போது, அவர் இந்திய ஒன்றியத்தின் குடியாக இருக்கிறாரா என்பதை உறுதி செய்கின்ற உரிமை தேர்தல் ஆணையத்துக்கு உண்டு என்று கருத்திட்ட உச்சநீதிமன்றம், ஆதார், இல்ல அட்டை போன்றவற்றைச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்துள்ளது.

இதனையடுத்து, நாடு முழுதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு முனைப்புத் திருத்தப் பணிகளைச் செய்யும் முயற்சிகளைத் தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

### குடியுரிமை குறித்த சிக்கல்கள்

எளிய பணிகளாக இவை தோன்றினாலும், இங்கு அடிப்படையான சில சிக்கல்கள் இருக்கின்றன.

ஆதார்,இல்ல அட்டை,பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றை வைத்துக்கொண்டு ஒருவர் இந்திய ஒன்றியத்தின் குடிதானா என்பதை உறுதி செய்து சான்றளிக்கும் உரிமை தேர்தல் ஆணையத்துக்கு இருக்கிறதா என்பது அடிப்படையானதாகும். தேர்தல் ஆணையம் வழங்கும் வாக்காளர் அடையாள அட்டையும் குடி என்பதற்கான சான்றாவணமாகக் கருதப்படவில்லை என்பதை இங்கு நோக்கவேண்டும்.

ஆனால், ஒருவர் இந்திய ஒன்றியத்தின் குடிதானா என்பதை எடுத்துக்காட்டவும் உறுதிப்படுத்தவும் எந்த ஒரு முறையான ஆவணத்தையும் ஒன்றிய அரசு இதுவரை வழங்க முன்வரவில்லை.

இந்திய ஒன்றியத்தின் குடியுரிமை குறித்த முழுமையான பொறுப்பும் கடமையும் அரசமைப்புச் சட்டத்தில் ஒன்றியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அதனால், இது ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் வருகிறது.

### ஆதார் குடியுரிமை ஆவணமன்று

நாடு விடுதலை பெற்று 78 ஆண்டுகள் கழிந்த பின்னரும், இந்திய ஒன்றியத்தின் குடி என்பதற்கான சான்றாக அடையாள ஆவணம் எனத் தனித்து ஒன்றை வழங்குவது குறித்து இன்று வரை இந்திய ஒன்றிய அரசு முயற்சிகள் எடுக்கவில்லை.

ஆதார்திட்டம்கொண்டுவரப்பட்டபோது, இது குடி என்ற உரிமையைத் தரும் அடிப்படைச் சான்றாக அமையவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



பெயர், பிறந்த நாள், முழு முகவரி, படம், விரல் வரிகளின் பதிவுகள், விழிகளின் பதிவுகள் என மனிதரின் அனைத்துத் தனித்தன்மை அடையாளங்களையும் பதிவு செய்துகொண்ட ஆதார் என்பது, குடியுரிமை ஆவணமாகவே அமைந்திருக்கவேண்டும்.

ஆனால், ‘ஆதார் அடையாளத்திற்கான சான்று குடியுரிமைக்கு அல்ல’ என்ற தெளிவான குறிப்புடன்தான் தொடக்கம் முதல் இன்று வரை ஆதார் வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய ஒன்றியத்தில், குடியுரிமை இல்லாதோரும் ஆதார் என்ற அடையாள அட்டையைப் பெறலாம் என்பது இதனால் தெரியப்படுத்தப்படுகிறது.

ஆதார் அறிமுகத்துக்கு முன்னர், இல்ல அட்டை மட்டுமே இருப்பு, முகவரி போன்ற அனைத்துக்கும் சான்றாவணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

குடிமைப் பொருள்கள் வழங்குதற்காக அந்தத் துறையினரால் தரப்படும் இல்ல அட்டையின் பயன்பாடு தற்போது குறைந்துவிட்டது எனலாம். இப்போது, ஆதார் எண் அடிப்படையில் மட்டுமே இந்த அட்டை தரப்படுவதால், அதன் பயன்பாடு குடிமைப் பொருள்களுக்கும் விலையில்லா வழங்கல்களுக்குமென மட்டுமே சுருங்கிவிட்டது.

பிறப்புச் சான்றினைப் பொறுத்து, பிறந்த இடம் அல்லது மருத்துவமனை வழியாக உள்ளாட்சி அமைப்புகளினால் வழங்கப்படுகிறது. அது மட்டுமே குடியுரிமையினைக் குறிப்பதாக இருக்கவில்லை. பிறப்புச் சான்றில் பெற்றோரது ஆதார் எண்கள் வலியுறுத்தப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால், ஆதார் என்பது குடியுரிமையைக் குறிக்காது என்ற நிலையில், பிறப்புச் சான்றிதழும் பல தடைகளை ஏற்படுத்திவிடுகிறது. தேர்தல் ஆணையம் எதிர்பாராமல் தன்னிச்சையில் மறுக்க வாய்ப்புகள் உண்டு.

### கடவுச் சீட்டு உள்ளோர் 6.5%தான்

இந்திய ஒன்றியத்தில் 9,26,24,661 குடிகள் மட்டுமே கடவுச் சீட்டுப் பெற்றிருக்கின்றனர். அதாவது, 2025 ஏப்ரல் 17ஆம் நாள் அளவில் 6.5% மட்டுமே கடவுச்சீட்டினைக் கொண்டிருப்போர் எனலாம். இவர்களில் வாக்குரிமை பெறும் அகவையை எட்டாதோரும் அடங்குவர் என்பது தெளிவு.

இந்த நிலையில், கடவுச்சீட்டு என்னும் ஒன்றை வாக்குரிமை பெறுதற்கான தகுதியாக எடுத்துக்கொள்வது எந்த வகையிலும் பொருந்துவதாக இருக்காது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு முனைப்புத் திருத்த முயற்சிகளை ஏற்றுக்கொண்டுள்ள உச்ச நீதிமன்றம்கூட, காலம் தாழ்த்தித் தேர்தல் நெருங்கும்போது மேற்கொள்ளப்படுவது குறித்து வினா எழுப்பியுள்ளது.

குறுகிய காலத்தில் தங்களது குடியுரிமை தொடர்பான சான்றுகளைக் காட்டவும், அவற்றைக் கொண்டு குடியுரிமையினை நிலைநாட்டவும் கால வாய்ப்பு இல்லை என்பது குறித்த அச்சம் எழுகிறது.

### தேர்தல் ஆணையத்துக்கு உரிமையில்லை

உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருப்பது போல, இருக்கின்ற சான்றுகளை ஆய்ந்து ஒருவர் இந்தியாவின் குடியுரிமை கொண்டவர்தான் என்பதை உறுதிப்படுத்தும் உரிமை தேர்தல் ஆணையத்துக்குஇருக்கமுடியாது.இதனை ஒன்றிய உள்துறை அமைச்சகம்தான் இறுதியில் முடிவு செய்யவேண்டும்.

இந்திய ஒன்றியத்தின் குடியுரிமை கொண்டோரை மட்டுமே வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும் என்பது உண்மைதான்.

ஆனால், யார் குடியுரிமை பெற்றவர் என்பதை முடிவு செய்யும் உரிமை தேர்தல் ஆணையத்துக்கு இல்லவேயில்லை. இத்தகையதொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வாக்களிப்பதைத் தடுக்கும் உரிமையும் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை.

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் ஆற்றவேண்டிய கடமைகளைத் தேர்தல் ஆணையம் தானாகவே எடுத்துக்கொள்ள முனைவது அரசமைப்புச் சட்டத்துக்கு முற்றிலும் முரணானதாகும்.

குறிப்பாக, வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு போன்ற பிற நாட்டார் ஊடுறுவலுக்கு வாய்ப்புள்ள மாநிலங்களில் இது ஒரு சிக்கலான பணிதான்.

ஆவணங்களின் உண்மைத் தன்மைகளை ஆய்வு செய்யவும், அவற்றின் வழியே குடியுரிமையினை உறுதி செய்யவும் ஒன்றிய அரசுக்கு, அதாவது உள்துறை அமைச்சகத்துக்கு அரசமைப்புச் சட்டம் உரிமை வழங்கியிருந்தாலும், இந்தப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய மேலாண்மை அமைப்பு தனியே இல்லை.

### ஆவணங்கள் மாநில அரசிடம்

பிறப்புச் சான்றிதழ், இல்ல அட்டை, வருவாய்ப் பதிவுகள் என அனைத்தும் மாநில அரசுகளிடமே தொடர்ந்து இருந்துவருகின்றன. மாநில அரசுகளின் மேலாண்மை அமைப்புகள் தருகின்ற விவரங்களை ஏற்றுக்கொண்டுதான் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் செயல்படுகிறது.

ஆதார் மற்றும் வெளியுறவுத் துறையின் பொறுப்பில் உள்ள கடவுச்சீட்டு போன்றவையும் இவற்றுக்கு விலக்கில்லை.

மேலும், அரசமைப்புக்கு மாறாக, தேர்தல் ஆணையம் குடியுரிமை குறித்து முடிவெடுக்கக்கூடிய நிலை வந்துவிட்டால், காலம் வீணாவதும் உரிய காலத்தில் தீர்வுகள் கிடைக்காமல் போவதும் நடைமுறையாகிவிடும்.

மாநில அரசின் அமைப்புகளே தேர்தல் ஆணையத்தின் சார்பில் செயல்படுகின்றன என்றாலும், அவற்றின் விதிகளுக்கும் ஆணைகளுக்கும் முடிவுகளுக்கும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

**தேர்தல் ஆணையத்துக்கு உரிமையில்லை**

இந்திய ஒன்றியத்தின் குடியுரிமை கொண்டோரை மட்டுமே வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும் என்பது உண்மைதான்.

ஆனால், யார் குடியுரிமை பெற்றவர் என்பதை முடிவு செய்யும் உரிமை தேர்தல் ஆணையத்துக்கு இல்லவேயில்லை. இத்தகையதொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வாக்களிப்பதைத் தடுக்கும் உரிமையும் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை.

**மாநிலங்களிடம் குடியுரிமை**

மாநில அரசுகளுக்குக் குடியுரிமை குறித்த பொறுப்புகளை வழங்கினால் பணிகள் எளிதாகும். மாநிலங்களின் ஒன்றியம்தானே இது. இதற்கேற்ப அரசமைப்புச் சட்டத் திருத்தமும் கொண்டுவரலாம்.

# சேலம் மண்ணை சிவப்பாக்கிய 33 தோழர்கள்



ப.பரமசிவம்

**சேலம் மாவட்டம், சேநங்கவள்ளி ஒன்றியம், சோரகை என்ற கிராமமும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் 8 10 ஆண்டுகள் வானம் பொய்த்ததின் காரணமாக விவசாயம் முழுதும் முடங்கிவிட்டது.**

உண்ண உணவு இல்லை! உடுக்க உடையில்லை! செய்ய வேலையில்லை வாழவும் வழியில்லை இயற்கைதான் அவர்களைப் பழிவாங்கிறதென்றால் வாழவைக்க வேண்டிய அரசாங்கமும் கண்டுகொள்ளவில்லை. விவசாயிகள் லேவா தேவிகாரர்களிடமும் சேலத்தில் சொகுசாக வாழ்ந்துகொண்டிருக்கும் முதலாளிகளிடமும் தனது குடும்பத்தைப் பாதுகாத்து வந்த விவசாய நிலத்தை அவர்களிடம் அடகு வைத்து அந்தப் பணத்தில் சில காலம் பசியைப் போக்கினார்கள்.

அதன் பிறகு மாவட்டம் விட்டும் மாநிலம் விட்டுச் சென்று கல்குவாரிகளிலும் செங்கல் சூளைகளில் கொத்தடிமையாக வேலை செய்து அதில் வயிறு வளர்த்து வந்தார்கள். அடகு வைத்த நிலத்தின் காலக் கெடு முடிந்துவிட்டது. எல்லா விவசாய நிலத்தையும் கந்து வட்டிக்காரனும் லேவா தேவிகாரனும் சேலத்து முதலாளிகளும் விவசாயிகள் நிலத்தைத் தனது பெயருக்கு மாற்றிக் கொண்டு விவசாயிகளை அவர்கள் வெளியேற்றத் தொடங்கினார்கள்.

அதைக் கண்ட தோழர் அர்த்தனாரி வாத்தியார் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் கே.செல்வராஜைத் தொடர்பு கொண்டு நில வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முற்பட்டபொழுது காவல்துறையும் அடியாட்களும் முதலாளிகளுக்கு ஆதரவாக வந்தார்கள். அவர்களைச் சமாளிக்கத்தான் கவண் கல் பயிற்சி வழங்கப்பட்டுக் காவல் துறையும் கூலிப்படைகளையும் ஓட ஓட விரட்டி அடித்தார்கள் வீரம் செறிந்த சோரகை விவசாயிகள். அங்கு மறைந்திருந்த ஒரு காவலர் முன்னேறிச் சென்ற தோழர் சோரகை பெருமாளைச் சுட்டான். சுதந்தரத்துக்குப் பின்னர் நம்மவர் ஆட்சியில் 1948 ஜூலை 11ல் பலியானவர்தான் தோழர் சோரகை பெருமாள்.

சேலம் சிறைத் தியாகிகள் 22 பேர் இரத்தம் சிந்தினர்

நாடு சுதந்திரம் அடைந்து ஓராண்டாகிவிட்டது. சோரகை விவசாயிகள் பட்ட துன்பம் போன்று பல சம்பவங்கள் நடந்தன. கூச் பீஹாரில் மக்கள் பஞ்சத்தால் மாண்டனர். இவற்றையெல்லாம் கண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது. இது உண்மையான சுதந்திரம் இல்லை. இதை எதிர்த்து நாம் செயல்பட வேண்டும். இந்த ஆட்சி அதிகாரத்தை மாற்ற வேண்டும் என்று காங்கிரசில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடனே சுதந்திர இந்திய அரசு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்தது. இரவோடு இரவாக நாடு முழுதும் கம்யூனிஸ்ட்களை வேட்டையாடி சிறையில் அடைத்தார்கள்.

சேலம் சிறை என்றால் இந்தியாவில் அனைவருக்கும் தெரியும். அந்தளவுக்குப் புகழ். சேலம் சிறைக்குக் கறுப்புக் குல்லாய் சிறை என்று பெயர். இந்தியா முழுதும் சிறைகளில் உள்ள திருடன், கொலைக்காரன், முடிச்சவிக்கி போன்றவர்களில் அடக்க முடியாதவர்களை, சேலம் கறுப்புக் குல்லாய் சிறைக்கு அனுப்பி வைத்துவிடுவார்களாம். சேலம் சிறைக் காவலர்கள் அப்படிப்பட்ட கைதிகளை அடக்குவதில் வல்லவர்களாம்.

இப்படிப்பட்ட சிறைக்குத்தான் இந்தியா முழுவதிலும் இருந்து கம்யூனிஸ்ட்டுகளை சேலம் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள். இப்படி சேலம் சிறையில் 350 கம்யூனிஸ்ட்டுகள் அடைத்து வைக்கப்பட்டனர். சிறை அதிகாரிகள், கறுப்புக் குல்லாய் கைதிகளை நடத்துவதைப் போல் கம்யூனிஸ்ட்டுகளையும் நடத்தினார்கள். இதற்கு கம்யூனிஸ்ட்டுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கம்யூனிஸ்டுகளை இணைப்பு சிறைக்குள் செல்லுமாறு அடித்து நொறுக்கிய சிறைக்காவலர்கள், அதற்குள் சென்றவுடன் கதவை இழுத்துப் பூட்டிவிட்டு இருபுறம் உள்ள சன்னல் வழியாக சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். பின்னர், துப்பாக்கிச்சூட்டை நிறுத்திவிட்டு, கதவைத் திறந்து சென்று பார்த்தனர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட்டுகளை அடித்து நொறுக்கினர். செத்தவர்களையும் அடித்துத் துவைத்தனர். எஞ்சிய தோழர்கள், "இன்குலாப் ஜிந்தாபாத்" "புரட்சி ஓங்குக" "விப்ளவம் ஜெயிக்கட்டே" என தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் போட்ட கோஷம் சிறையையே அதிரவைத்தது.

சேலம் சிறையில் நடந்த இந்த கொடுஞ் செயலில் 22 தோழர்கள் செத்து மடிந்தனர். அவர்களில் இருவர் பழைய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர், திருச்செங்கோடு சூரியம்பாளையத்தைச் சேர்ந்த காவேரி முதலியார். மற்றவர் சேலத்தைச் சேர்ந்த அரியாக்கவண்டம்பட்டி ஜவஹர் மில் தொழிலாளி ஆறுமுகம்.

எஞ்சிய 20 பேரில் 19 பேர் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் சென்னையைச் சேர்ந்த ஷேக்தாவுத். 107 கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு குண்டு காயங்கள் ஏற்பட்டன. பலருடைய உடலுறுப்புகள் ஊனமாயின.

காயம்பட்டதால் கைகளும் கால்களும் பாதிக்கப்பட்ட கேரளத் தோழர் நாராயணன்மாவார். பழைய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நாமக்கல் பழைய பாளையம் தோழர் சுப்பு வாழ்நாள் முழுதும் குண்டுகளை தாங்கிய உடலோடு வாழ்ந்தார்.

**1972 விவசாயிகள் போராட்டம்**

தமிழ்நாட்டுவிவசாயிகள்விளைபொருள் வீழ்ச்சியால் வேதனைப்பட்டும், கடன் வசூல் கொடுமையால் கண்ணீர் வடித்துக் கொண்டும் இருந்த நேரத்தில், தமிழக அரசு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியது. மேலும், கடன் வசூலுக்காக ஜப்தி என்ற பெயரில் விவசாயிகள் வீடுகள், குடிசைகளை சூறையாடினர். பண்ட பாத்திரங்களை எல்லாம் தெருவில் வீசியெறிந்தனர். ஆடு மாடுகளை ஓட்டிச் சென்றனர் பம்புசெட்டுகளை எடுத்துச் சென்றனர்.

இதைக் கண்ட ஆத்திரமடைந்த விவசாயிகள் பொங்கி எழுந்தனர். சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயிகள் என அனைவரும் போராட்டத்தில் குதித்தனர். ஆளும் காங்கிரஸ், காமராஜ் காங்கிரஸ்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து பகுதி விவசாயிகளையும் ஒன்றிணைந்து போராட்டங்களை தீவிரப்படுத்தியது. ஆளும் காங்கிரஸ், காமராஜ் காங்கிரஸ் தீர்வு காணாததால் 01.07.1972ல் தமிழ்நாடு அளவில் வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் அறவழியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஆத்தூர் சேலம் சாலையில் விவசாயிகள் மாட்டு வண்டிகளை வரிசையாக நிறுத்தினர். வண்டிச் சக்கரங்களை கழட்டி போக்குவரத்தைத் தடுத்தனர். இந்தப் போராட்டத்தைப் பொறுக்க முடியாத காவல்துறையினர் குண்டுகள் தீரும்வரை சுட்டனர்.

வெள்ளையர் ஆட்சியில் ஜெனரல் டயர் என்ற அதிகாரி ஜாலியன்வாலாபாக்கில் மக்களை சுட்டேன், சுட்டேன், துப்பாக்கியில் குண்டுகள் தீருவரை சுட்டேன் என்று கொக்கரித்தானாம். அதை விட மோசமாக பெத்தநாயக்கன்பாளையத்தில் குண்டுகள் தீருவரை சுட்டனர். அதேஇடத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

ஆத்தூரிலிருந்து பெத்தநாயக்கன்பாளையத்துக்கு விரைந்து வந்த போலீஸ் படை நரசிங்கபுரம் தோழரை அடித்தே கொன்றனர். இவரையும் சேர்த்து சேலம் மாவட்டத்தில் மட்டும் 9 பேர் அந்த போராட்டத்தில் பலி கொடுக்கப்பட்டது.

சேலம் எருமாபாளையம் சிவக்குமார்

சேலம் அருகேயுள்ள எருமாபாளையம் ஒரு காலத்தில் கள்ளச் சாராயத்திற்கு பெயர்போன இடம். அங்கு பாரம்பரியமாக இந்தத் தொழில் நடைபெற்று வந்தது. சருகுமலை இதற்கு உதவியாக இருந்தது. எருமாபாளையம் என்றால் தமிழ்நாடு முழுதும் தெரியும். அந்தளவுக்கு எருமாபாளையத்தில் கள்ளச் சாராயம் ஆறாய் பெருக்கெடுத்து ஓடிய காலம். அந்தநேரத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கிளையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளையும் அந்தப் பகுதியில் உருவானது.

இளைஞர் பெருமன்றத்தின் கிளைச் செயலாளராக இருந்த சிவக்குமார் குடும்பமும் கள்ளச்சாராயம்தான் காய்ச்சி வந்தது. தோழர் சிவக்குமார் கட்சியில் சேர்ந்தவுடன், அவரும் அவரது குடும்பமும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை கைவிட்டு வேறு தொழில் செய்து வந்தனர். இளைஞர் பெருமன்ற பொறுப்பாளராக இருந்த சிவக்குமார், கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் இருந்து ஊர் மக்கள் விடுபட வேண்டும் என கடுமையாகப் போராடினார்.

பாரம்பரியமாக அந்தத் தொழிலை செய்து பழக்கப்பட்ட அவர்கள், சிவக்குமாரை ஊருக்குள் விடக்கூடாது என திட்டம் தீட்டினர். 28.05.2008 அன்று பட்டப்பகலில் நடுரோட்டில் அந்தப்பாதகர்கள் சிவக்குமாரை வெட்டிக் கொன்றனர். அதற்குப் பிறகு விழித்துக்கொண்ட காவல்துறை, கடுமையான நடவடிக்கை எடுத்து அந்த ஊரில் கள்ளச் சாராயமே இல்லாமல் செய்தது.

தொடர்புக்கு: 9442995040



## சேலம் மாவட்டத்தில் உயிர் நீத்த வீரத்தியாகிகள்

1. சோரகை தியாகி தோழர் பெருமாள் 1948

**சேலம் சிறைத் தியாகிகள் :**

2. காவேரி முதலியார் திருச்செங்கோடு
3. ஆறுமுகம் சேலம்
4. ஷேக்தாவூத் சென்னை

**மலபாரை சார்ந்தவர்கள் :**

5. என். பாலன்
6. என். பத்மநாதன்
7. கே.என். கோரன்
8. என்.கண்ணன்
9. எம்.கே. கோபாலன் நாயர்
10. பி.கோபாலன் நாயர்
11. நாராயணன் நாயர்
12. ஏ.கே.குஞ்சப்பன்
13. குஞ்சிராமன்
14. குஞ்ஞம்பு
15. களத்துக்கோயிலோடன்
16. மா.கோரன்
17. எம்.நாராயணன் நம்பியார்
18. பி.கோவிந்த நம்பியார்
19. குஞ்சப்பன் நம்பியார்
20. அம்பாடி ஆசாரியார்
21. ஓ.பி.அனந்தன் நம்பியார்
22. டி.ராமன் நம்பியார்
23. எம்.கோபாலன் குட்டிநாயர்

**பெத்தநாயக்கன்பாளையம் தியாகிகள் :**


24. சாந்தமூர்த்தி
25. விவேகானந்தன்
26. மணி
27. ஆறுமுகம்
28. முத்துசாமி
29. பிச்சைமுத்து
30. கோவிந்தராஜன்
31. முட்டாசு
32. ராமசாமி நரசிங்கபுரம்

**சேலம் எருமாபாளையம் தியாகி**

33. சேலம் எருமாபாளையம் சிவக்குமார்.

33 பேர் இரத்தம் சிந்தி சேலம் மண்ணை சிவப்பாக்கினார்கள். அந்த செம்பூமியில் தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில 26 வது மாநாடு நடைபெறுகிறது.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டச் செயலாளர் ஜெய்க்குமார் ஜெய்ஸ்ரீகாந்த் மஞ்சுளா தம்பதியரின் மகள், ஜே. சசிகலா எல்.இராஜசேகர் ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டச் செயலாளர் டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். அந்நிகழ்ச்சியில் கட்சியின் வார இதழான ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.10,000 மாவட்டச் செயலாளர் அவர்களிடம் வழங்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.இராமமூர்த்தி மற்ற நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

◆ கோவை சூலூர் தெற்கு கண்ணம்பாளையம் தெற்கு கட்சிக் கிளை உறுப்பினர், இளைஞர் பெருமன்ற உறுப்பினர் பி.பிரபு ஜி.கே.சௌமியா ஆகியோரது சாதி மறுப்புத் திருமண விழா வரவேற்பு 2.7.2025 அன்று ஹோட்டல் ஸ்ரீ அக்ஷரா அரங்கில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, சூலூர் தெற்கு வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக் குழு உறுப்பினர் பி.சுப்ரமணியம், வட்டாரக் குழு உறுப்பினர்கள் ர.மாலதி, வெ.பாலதண்டாயுதம், எம்.சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளிக்கப்பட்டது.

## ஜூலை 9 அகில இந்திய பொது வேலைநிறுத்தம்: வங்கி ஊழியர்கள் பங்கேற்புக்கு நன்றி

அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம் ஏஐபிஇஏ, அனைத்திந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் ஏஐபிஓஏ மற்றும் இந்திய வங்கி ஊழியர்கள் சம்மேளனம் பிஇஃப்ஐ ஆகியவற்றின் அறைகூவல்படி 2025 ஜூலை 9ல் நாடு முழுதும் நடைபெற்ற அனைத்திந்திய வங்கி வேலை நிறுத்தம் நினைவில் நிற்கத்தக்க மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். சில மாநிலங்களில் வங்கிக் கிளைகள் எதுவும் திறக்கப்படவில்லை. பிற மாநிலங்களில் வேலை நிறுத்தத்தில் பங்கு பெறாத அதிகாரிகள் இருந்த கிளைகள் திறக்கப்பட்டு இருந்தாலும், வழக்கமான அன்றாட வங்கிப் பணிகள் நடைபெறவில்லை. ஜூலை 8 மாலையும் ஜூலை 9 காலையும் வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வேலை நிறுத்தக் கோரிக்கை முழக்கங்களை எழுப்பினர்.

வேலை நிறுத்தத்தை மாபெரும் வெற்றியாக்கிய நமது சங்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். நமது எதிர்ப்பை அரசு சரியான கண்ணோட்டத்தில் எடுத்துக் கொண்டு தங்களின் கொள்கைகளை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெறும் என நாம் நம்புகிறோம்.

இவ்வாறு ஏஐபிஇஏ பொதுச் செயலாளர் சி.ஹெச். வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## ஜே.ஜேம்ஸ்க்கு கோவை தொழில் அமைப்புகள் பாராட்டு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டத் துணைச் செயலாளராகவும் தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கத்தின் டேக்ட்(TACT) மாவட்டத் தலைவராகவும் உள்ள ஜே.ஜேம்ஸ் அவர்களுக்கு சமீபத்தில் நியூஸ் 18 தொலைக்காட்சி நிறுவனம் ஆளுமை மிக்க தலைவர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

இதை அடுத்து கோவையில் உள்ள சிறு குறு தொழில் முனைவோர் சங்கங்கள் ஜே.ஜேம்ஸ் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். 10.7.2025 அன்று மாலை கோஇண்டியா வளாகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கோவை தொழில்களின் தந்தை ஏ.வி.வி.வரதராஜன், கொடிசியா தலைவர் கார்த்திகேயன், பம்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் கார்த்திக், சீமா தலைவர் மிதின் மகேந்திரா ராம்தாஸ், டான்சியா துணைத் தலைவர் சுருளிவேல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, வழக்கறிஞர் எல்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் டேக்ட் மாவட்டப் பொதுச் செயலாளர் ஜி.பிரதாப்சேகர், மாவட்டப் பொருளாளர் எம்.லீலாகிருஷ்ணன் மற்றும் சண்முகசுந்தரம், சந்திரசேகரன், சேகர், விஸ்வநாதன், கார்த்திகேயன், பாரதரவி, ராஜேந்திரன், சக்திவேல், கே.முருகன், தங்கராஜ், ராமசாமி, சிவதானுபிள்ளை, வெங்கடேஷ்பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தொழில் மானியம் ரூ.50 ஆயிரத்திற்கான காசோலை வழங்கி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் கலந்துரையாடல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி, சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார். அந்த வகையில், மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பல எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதன்படி, தமிழ்ப்புதல்வன் திட்டம், தாலிக்குத்தங்கம், திருமண நிதியுதவித்திட்டம், முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம், சுய தொழில் தொடங்க மானிய உதவித்தொகை திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், இளையமதுக்கூடத்தை சார்ந்த சரண்யா என்ற பயனாளியிடம் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் நலவாரியத்தின் மூலம் தொழில் மானியம் ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினை வழங்கி மாவட்ட ஆட்சியர் அவர்கள் திட்டத்தின் பயன்கள் குறித்து கலந்துரையாடினார்கள்.

அனைத்துக் கட்சி மக்கள் போராட்டக் குழு சார்பில்

## லாக்அப் கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



திருப்புவனம் கோவில் காவலர் அஜித் குமார் காவல்துறையினரால் அடித்துக் கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்தும், நீதி கேட்டும் 12.07.2025 அன்று விருதுநகர் அசன் ஹோட்டல் அருகில், அனைத்துக் கட்சி மக்கள் போராட்டக் குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் பழனிக்குமார் கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தை கட்சி, தமிழ் புலிகள் கட்சி, தலித் விடுதலை இயக்கம், திராவிடர் கழகம், ஆதித்தமிழர் கட்சி, மக்கள் நீதி மையம் காங்கிரஸ் எஸ்.சி துறை, ஆம் ஆத்மி ஆகிய இயக்கங்கள் பங்கேற்றன. இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சக்கணன், விருதுநகர் நகர துணைச் செயலாளர் மாரியப்பன், விருதுநகர் நகரப் பொருளாளர் மாரீஸ்வரி, மலர்கொடி, காளியப்பன் மற்றும் பலர் பங்கு பெற்றனர்.

## வசந்தி அம்மாளுக்கு அஞ்சலி



தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தின் மூத்த முன்னோடியும், மாநிலச் செயலாளருமான பி.எம்.மணிகண்டன் அவர்களின் தாயார் வசந்தி அம்மாள் அவர்கள் 14.7.25 அன்று அதிகாலை இயற்கை எய்தினார். அன்னாரின் பூத உடலுக்கு அவரது இல்லம் அமைந்துள்ள செங்குன்றம் நாறாவாரி குப்பத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு மற்றும் கோவில்மனைக் குடியிருப்போர் சங்க மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை, தென்சென்னை ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் ஆர்.அழகேசன், மத்திய சென்னை வேல்முருகன், முத்துக்குமார் திருநாவுக்கரசு (தென்செ) உள்ளிட்டோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## குடியுரிமையைத் தேர்தல் ஆணையம் பறிக்க முடியாது

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்படவேண்டிய சூழ்நிலையில் இருந்துவிடுகின்றன என்பதையும் இங்கு மறந்துவிடக்கூடாது.

இந்த நிலைமைகளில், வேண்டாதோரை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதும், வாக்குரிமை பெறத் தகுதி இல்லாதோரை இணைப்பதும் தொடர்ந்து நடந்துவருகிறது. ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும், வாக்காளர் லட்சக் கணக்கில் விடுபட்டுள்ளதாகவும் தகுதி இல்லாதோர் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துகொண்டே இருக்கின்றன.

மாநிலங்களில் உள்ள ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தங்களுடைய எண்ணத்துக்கு ஏற்பப் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறுவதாகப் புறந்தள்ளவும் முடியாது. ஏனெனில், விடுபடல், சேர்த்தல் என்பன குறித்த உண்மையான சிக்கல்கள் தொடர்கின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது. இவை யாவும் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பிலேயே உள்ளன.

### குடியுரிமைக்குத் தனி ஆவணம்

தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் கைப்பாவையாகச் செயல்படுகிறது என்னும் குற்றச்சாட்டினையும் இங்குக் குறிப்பிடவேண்டியுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவில் வாழும் குடிகளுக்குக் குடியுரிமை என்பதைத் தெளிவாக வரையறுத்துக் காட்டும் ஒரு சான்றாவண அடையாளம் வேண்டப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

ஏதோவொரு வகையில் இன்று ஆதார் பரவலாக நடைமுறைக்கு வந்துவிட்டது. ஒவ்வொரு மனிதனின் தனித்த அடையாளங்களும் பெருமளவில் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

இதனை எடுத்துக்கொண்டு, உரிய ஆய்வுகளின் அடிப்படையில் குடியுரிமைக்கான அடிப்படை ஆவணமாக ஆதார் மாற்றப்பட வேண்டும்.

குடியுரிமை இல்லாதோர் பலர் இப்போது ஆதார் எண்களைப் பெற்றுள்ளனர் என்பது உண்மைதான். இவர்களை உரிய வகையில் வடிகட்டி, அவர்களுக்கு வேறு முறையிலான அடையாள ஆவணம் வழங்கலாம்.

இத்தகைய முயற்சிக்குக் காலம் பிடிக்கலாம். சிக்கல்களும் தடைகளும் வரலாம். ஆனால், இந்திய ஒன்றியத்தின் குடியுரிமைச் சிக்கல்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கும்.

### மாநிலங்களிடம் குடியுரிமை

மாநில அரசுகளுக்குக் குடியுரிமை குறித்த பொறுப்புகளை வழங்கினால் பணிகள் எளிதாகும். மாநிலங்களின் ஒன்றியம்தானே இது. இதற்கேற்ப அரசமைப்புச் சட்டத் திருத்தமும் கொண்டுவரலாம்.

தற்போது ஆதார் 12 எண்கள் கொண்டிருப்பதில் முதல் இரண்டு எண்கள் மாநிலங்களைக் குறிப்பதாக இருந்திருந்தால் நன்மை கிடைத்திருக்கும். ஆனால், மீண்டும் எண்களை மாற்றுவது குழப்பங்களைத் தரலாம். எனவே, இப்போதுள்ள நிலைமைகளை ஏற்றுக்கொண்டு குடியுரிமை அல்லாதோர் எண்களை மட்டும் நீக்கி வேறு ஆவணங்களைத் தரலாம்.

இந்திய ஒன்றியத்தின் குடியுரிமைக்கான தனித்த அடையாள அட்டை ஒன்று உருவாகிவிட்டால், அது அடிப்படை ஆவணமாக அமைந்துவிடும். உலகின் பெரும்பாலான நாடுகளில் குடியுரிமை ஆவணம் தனியாக இருக்கிறது.

இல்ல அட்டை, வாக்காளர் அட்டை, கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் ஆகிய அனைத்துக்கும் அடிப்படைச் சான்றாவணமாகக் குடியுரிமை ஆவணம் ஒன்று இருந்தால், அது பெரும் பயனாக அமையும். இன்று எழும் எல்லாச் சிக்கல்களுக்கும் எளிதில் தீர்வும் கிடைத்துவிடும்.

தொடர்புக்கு 9444075561

# ரிதன்யா – ஒருவனுக்கு ஒருத்தி என்பது உடன்கட்டை ஏறுதலின் புதிய வடிவம்!



முனைவர் எஸ். ஜீவா

**திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே கைகாட்டிபுதூர் பகுதியைச் சேர்ந்த ரிதன்யா (வயது 27), வரதட்சணை கொடுமை காரணமாக ஜூன் 28 ஆம் தேதி பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் தமிழ்நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.**

ரிதன்யாவின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில், அவரது கணவர் கவின்குமார் (வயது 28) மற்றும் மாமனார் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டு திருப்பூர் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

திருமணமாகி வெறும் 77 நாட்களில் வாழ்க்கையை முடித்துக்கொண்ட ரிதன்யாவின் தற்கொலை வழக்கு வரதட்சணை கொடுமையாலும் பாலியல் உள்ளிட்ட கணவனின் துன்புறுத்தல்களாலும் மட்டுமே நிகழ்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இவைதான் பிரச்சனைகள் என்றால் சட்டப்பூர்வ நடவடிக்கையும் பிரிதலும் வேறொரு வாழ்க்கையும் என்று அவர் இன்று உயிரோடு இருந்திருக்க முடியும். ஆனால், ரிதன்யா தன் தற்கொலைக்கான கூடுதல் காரணத்தை தெளிவாகச் சொன்னாள். “ஒருவனுக்கு ஒருத்தி. அந்த ஒருவனோடு வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்றால் தற்கொலை செய்வதுதான் பெண்ணின் கடமை”. அவள் அப்பாவும் அச்சுப் பிசகாமல் அதையே அழுத்திச் சொன்னார், “என் மகளை இழந்த வலி இருக்கிறது. ஆனாலும், அவள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பாரம்பரியத்தைக் காப்பாற்றினாள் என்பதில் பெருமையும் இருக்கிறது” என்றார்.

அப்பாவை விடுங்கள். பழைய ஆள், பழமைவாதி என்று தள்ளி வைக்கலாம். ஆனால் ரிதன்யாவை இந்தப் பாரம்பரியப் பெருமிதம் எப்படிக் கவ்விக்கொண்டு தற்கொலையில் தள்ளியது என்பதில்தான் முழு ஆபத்தும் அடங்கியிருக்கிறது.

கிட்டத்தட்ட இந்த ஒருவனுக்கு ஒருத்தி என்பது, சதி என்னும் உடன்கட்டை ஏறுதலுக்கு ஒப்பானது. கணவன் இல்லையென்றால் பெண்களுக்கு எதற்கு வாழ்க்கை? செத்துப் போ! என்பதுதான் சதி எனும் உடன்கட்டை ஏறுதல் என்கிற அநீதி. அதை ஒழித்துவிட்டதாய்ப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், அது இன்னொரு விதத்தில் பெண்களைக் காவு வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது என்பதை ரிதன்யாவின் ஒப்புதல் வாக்குமூலம் நிரூபிக்கிறது. அதாவது அவள் மட்டுமே சாட்சியம் அளித்துவிட்டுப் போயிருக்கிறாள். சொல்லாமல் செத்துக்கொண்டிருப்பவர்கள் ஏராளம்!

ரிதன்யா, எம்.எஸ்.சி மற்றும் சி.எஸ் பட்டதாரி. நன்றாகப் படித்து, திருமணத்திற்குமுன் தன் அப்பாவின் நிறுவனத்தை நிர்வகித்தவள். வீட்டுக்குச் செல்லப்பிள்ளை. மேலும் அவள் யார் என்பதை அவளது வாக்குமூலமும் வெளியான அவளது திருமணப் புகைப்படங்களும், வீடியோக்களும் காட்டுகின்றன. நமது நாட்டுக் கல்வி முறை பெரிய புரட்சிகரமானதாக இல்லாவிட்டாலும் தேவையான அளவு சீர்திருத்தம் கற்பிக்கக் கூடியதுதான். பெண்கள் பத்தாம்பசலித்தனத்தை விட்டொழிக்கும் வழிகளைப் போதிக்கக் கூடியவைதான். “நிமிர்ந்த நடையும் நேர்கொண்டப் பார்வையும்...” எனத் தன்னம்பிக்கையினை அளிக்கக் கூடியவைதான். பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான பல வரலாற்றை, தொடக்கம் முதலே அளிக்கக் கூடியவைதான். எதுவும் ரிதன்யாவுக்கு நம்பிக்கையளிக்கவில்லை; ஈர்க்கவில்லை.

வேறெது நம்பிக்கையளித்து ஈர்த்தது?

சரியோ தவறோ, சமூகத்தில் செல்வாக்கு செலுத்தும் கருத்துகள் மக்களை ஈர்த்து நம்பிக்கையளிக்கின்றன. அவ்வகையில்தான் மக்கள் அணிதிரட்டப்பட்டுச் சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் மாற்றங்களோ அல்லது பிற்போக்கில் வீழும் நிலைமைகளோ நிகழ்கின்றன. என்கிற வகையில் இப்போதும், ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கருத்து சமூகத்தில் செல்வாக்கு செலுத்துகிறது. வீட்டுக்கு வெளியே இந்தச் சமூகத்தில் சினிமா மூலமாக, புத்தகங்கள் மூலமாக, சமூக ஊடகங்கள் மூலமாக, அரசியல் இயக்கங்கள் மூலமாக என ஏதோ ஒரு வகையில் இந்தக் கருத்துகள் வெளிப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அவைதான் ரிதன்யாக்களைக் காவு வாங்குகின்றன.

சமீபத்தில் வெளியான “பத்மாவதி” திரைப்படம் நினைவிருக்கிறதா? பெரும் விவாதங்களைக் கிளப்பி அரசியலாக்கப்பட்ட படம். பல்வேறு விவாதங்களில் ஒன்று, அரசி பத்மாவதியோடு சேர்ந்து பெண்கள் பெருங்கூட்டமாக உடன்கட்டை ஏறுவது. அது, இசுலாமிய மன்னனுக்கும் ஆண்களுக்கும் அஞ்சி இந்துப் பெண்கள் தீக்குளித்ததாக மட்டும் பேசப்படவில்லை. நல்ல இந்துப் பெண் ஒருவனுக்கு ஒருத்தி என்றே வாழ்வாள் என்பதாகவும் விவாதிக்கப்பட்டது. இந்த விவாதத்தின் பின்னே இந்துத்துவக் கலாச்சார இயக்கங்களும் ஆதரவாளர்களும் இருந்தனர்.

அவ்வகையில் இந்துத்துவம் போதிக்கின்ற பெண்ணியம் கூடுதல் அபாயமானது. சுருக்கமாகச் சொன்னால், இந்துத்துவம் பெண்களை மதத்திற்குக் கற்புடையவளாக இருக்கச் சொல்லி நிர்பந்திக்கிறது; மதத்திற்குக் கற்புடையவளாக இருப்பதென்றால், சொந்த சாதிக்குக் கற்புடையவளாக இருப்பதென்று நிர்பந்திக்கிறது; சொந்த சாதிக்குக் கற்புடையவளாக இருப்பதென்றால் வாழ்ந்தால் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்து செத்துப் போவது என்று நிர்பந்திக்கிறது.

நமக்கு கொங்கு மண்டலப் பகுதிகளில் பெண்களைக் கலாச்சார ரீதியாகக் கட்டுப்படுத்தும் வள்ளிக்கும்மி நடவடிக்கைகள் தெரியும். அதன்மூலம், “நாங்கள் வேறு சாதி ஆண்களை மணக்க மாட்டோம்” என்று சத்தியம் வாங்கி மிரட்டப்படுவதும் தெரியும். அதேநேரத்தில் வெளிப்படையாக நடந்துகொண்டிருந்தாலும் இன்னும் விவாதத்திற்கு உள்ளாக்கப்படாத, “விளக்குப்பூஜை குழுக்கள், வீதி மற்றும் ஊர்களுக்கான பெண்கள் வழிபாட்டுக் குழுக்கள், பண்டிகைக் கால நோன்பு மற்றும் வழிபாட்டுக் குழுக்கள்” போன்றவையாகும்.

பெண்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட இக்குழுக்கள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ் எனும் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக சங்கத்தின் மகளிர் பிரிவான ராஷ்ட்ர சேவிகா சமிதி மூலம் வழிநடத்தப் படுகின்றவையாகும். இக்குழுக்களில் பக்திப் பாடல்கள், இந்து ஐதீகக் கதைகள், பண்டிகை விளக்கங்கள் ஆகியவற்றை போதிப்பது முக்கியக் கடமைகளாகக் காட்டப்படுகிறது. இதற்காகப் பெரிய அளவிலான நிதி செலவிடப்படுகிறது. உள்ளூர்க் கோயில் திருவிழா ஊர்வலங்கள், விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் மற்றும் பண்டிகைக் கால வழிபாடுகளில் ஒரே நிறத்தில், ஒரே அளவு சரிகை கொண்ட பட்டுச்சேலைகள் அல்லது உயர்ரகப் புடவைகள் அணிந்த பெண்கள் கூட்டத்தை நீங்கள் பார்க்கலாம். இவையெல்லாம் நமக்குப் பண்பாட்டு ஓர்மை போல் தோற்றமளிக்கும்.

ஆனால் நாடு முழுவதுமான இந்த அளவில்லாச் செலவுகளுக்குப் பின்னால்தான் இந்துத்துவப் பெண்ணியம் என்ற அரசியல் நடைபெறுகின்றன. இவர்களிடையேதான், “இந்துப் பெண்கள் என்றால் வீரத்தாய்கள்” என்ற கருத்தியல் பரப்பப்படுகின்றது.

“வீரத்தாய் என்றால், இந்துப் பெண்கள் ஒவ்வொருவரும் பாரத திருநாட்டைக் காக்கும் குலத்தெய்வங்களாக இருக்க வேண்டும். முதலில் அவர்கள் வீட்டு மானத்தைக் காக்கிறவர்களாக இருக்க வேண்டும். சாதியும் மதமும் இரு கண்களைப் போன்றவை, அவற்றைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும். நம் பிள்ளைகளை அதன்படி வளர்க்க வேண்டும். இதற்கெல்லாம் ஆபத்தென்றால், எதிரிகளை அழிப்பதிலும் முதலாவது ஆளாக இருக்க வேண்டும்” என்பதுதான் இங்கு அளிக்கப்படும் போதனைகள்.

இந்த வார்த்தெடுப்பில்தான் குஜராத் வன்முறையின் போது இசுலாமியப் பெண்களைச் சொல்லொண்ணா கொடுமைகளுக்கு உட்படுத்துவதில் இந்துப் பெண்களும் ஈடுபட்டனர். காஷ்மீரில் சிறுமி ஆஷிபாவைச் சீரழித்தவர்களுக்கு இந்துப் பெண்கள் ஆரத்தி எடுத்து ஆர்ப்பரித்தனர்.



“வீரத்தாய் என்பது பிற மதத்தவரை எதிர்கொள்வது மட்டுமல்ல, தேவைப்பட்டால் தன்னைத் தானே மாய்த்துக் கொள்வதுமாகும். குறிப்பாக மாற்று மதத்தவரின் ஆக்கிரமிப்பின் போது அரசி பத்மாவதிகளாக மாறி வாழ்க்கையை முடித்துக்கொள்ள வேண்டும். கற்போடு வாழ்வதுதான் பெருமிதம். அது ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வதுமாகும்” என்கிற கருத்துகள் இங்கேதான் பரப்பப்படுகின்றன. ஆக மொத்தத்தில், ராஷ்ட்ரிய சேவிகா சமிதி, தமிழகத்தில் ஒரு “பாரம்பரியத்தனமான தேசபக்திப் பெண்மையை” உருவாக்கும் முயற்சியில் உள்ளது. இது பெண்களின் சமூகப் பங்களிப்பை வளர்ப்பதைப்போல் தோன்றினாலும், அதன் முழு அடிப்படையானது, ஒரு அடக்குமுறையான கலாசாரக் கட்டமைப்பையே பிரதிநிதிக்கிறது.

பெண்களிடம் மட்டுமல்ல, குழந்தைகளிடமும் இதைப் பிஞ்சு வயதிலிருந்தே ஆர்.எஸ்.எஸ் புகுத்துகிறது. இதற்காக அவர்கள், 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான “பால கோகுலம்” என்ற அமைப்பை உருவாக்கிவைத்திருக்கிறார்கள். “தேச பக்தி மிக்க இளந்தலைமுறையை உருவாக்குவதுதான் இதன் பணி” என்று சொல்கிறார்கள். இவர்களின் தேசபக்திக்கு மீண்டும் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது எனக் கருதுகிறேன்.

வடநாடெங்கும் வளர்ச்சி பெற்ற இப்போக்கு இப்போது தமிழ்நாட்டிலும் செல்வாக்கு பெறத் தொடங்கியிருக்கிறது. குறிப்பாக குமரி மாவட்டம் மற்றும் கோவை, திருப்பூர் உள்ளிட்ட கொங்கு மண்டலம் எங்கும் நன்றாகவே வேரூன்றி வளர்ந்துகொண்டிருக்கிறது.

நாம் சொல்ல வருவது இதுதான்! படித்த, பட்டதாரியான, அப்பாவின் தொழிலை நிர்வகித்த, திறமையுள்ள ரிதன்யாவிடம் கூட ஏதோ ஒருவகையில் “இந்து பெண் மானப்பெண் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் பெண் அல்லது சாகும் பெண்” என்ற கருத்து செல்வாக்கு செலுத்தும் அளவுக்குப் பிற்போக்கு அரசியல் செல்வாக்கு செலுத்துகிறது. இது கடந்த காலத்தின் எச்சமல்ல, நிகழ்காலத்தின் அபாயம்.

எல்லா மதங்களும் பெண்களை அடிமைத்தனத்தில் வைத்திருப்பதையே போதிக்கின்றன. அதேபோல எல்லா மதம் சார்ந்த பெண்கள் அமைப்புகளும் அந்த மதத்தின் மரபுகளையும், கட்டுப்பாடுகளையும் பாதுகாக்கும் நோக்கில்தான் செயல்படுகின்றன.

அதாவது, பெண்கள் வீட்டுக்குள்ளே பாதுகாப்பாக இருக்க வேண்டும்; தாய்மையும் பணிவும் பெண்களின் தலைமைத் தன்மையைக் காட்டும்; கற்பு, நற்குணம், கடமை ஆகியவை பெண் வாழ்வின் முக்கியத் தூண்கள் போன்ற கருத்தாக்கத்தை வேரூன்றச் செய்யவே அவை போதிக்கின்றன. இவை அனைத்தும் ஒரு பெண்ணின் சுய விருப்பம், சுய அனுபவம், சுதந்திரம் ஆகியவற்றை நிராகரிக்கிற அடிப்படைகளாகவே செயல்படுகின்றன. பெண்கள் “சுய சிந்தனையோடு” வலம் வரக்கூடாது, என்பதையே வலியுறுத்தும் கட்டமைப்புகளாக இருக்கின்றன.

இப்படியாக, மத அமைப்புகளில் செயல்படும் பெண்கள் தங்கள் மீதான கட்டுப்பாடுகளை “அன்பான, அழகான தியாகம்” எனச் சொல்லிக்கொள்வார்கள். “நான் என் குடும்பத்திற்காக வாழ்வதில் எனக்குப் பெருமை”, “என் கணவனே என் தலைவன்” “இறைவனே எங்கள் வழிகாட்டி” என்ற பாவனையில் தங்கள் மீதான அடக்குமுறையையே தங்களுக்கான பெருமிதமாகக் கொள்கிறார்கள். அதில் எதாவது பாதிப்பென்றால் உயிரை விடுவதைக் கடமையாகக் கருதுகிறார்கள்.

இங்கே ஒரு ரிதன்யா இருந்தால் அங்கே ஒரு ரீன்னாவோ ரிஹானாவோ இருக்கிறாள் என்பதுதான் நிதர்சனம்.

சரி, முடிவுக்கு வருவோம். கல்வி அளித்த கருத்துகளைவிடச் சமூகத்தில் விதிக்கப்படும் கருத்துகளின் வீரியம் அதிகமாக இருக்கிறதுதான். ஏன் மாற்றுக்கருத்து செல்வாக்கு செலுத்தவில்லை? முற்போக்கு கருத்து செல்வாக்கு செலுத்தவில்லை? பெரியார் மண் போன்ற பெருமிதங்களின் எதார்த்தம் என்னவாக இருக்கிறது? மாற்று மற்றும் முற்போக்கு இயக்கங்களுக்குக் குறைவில்லை. பெண்கள் அமைப்புகள், பண்பாட்டு இயக்கங்கள் என்று பட்டியல் போட்டால் பக்கங்கள் நீளும். இருந்தும் பிற்போக்கு கருத்துகள் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றால் இரண்டு பிரச்சனைகள் இருப்பதாகப் பொருள்.

ஒன்று, முற்போக்கு அமைப்புகள் பலமானவைகளாக இல்லை. இரண்டு, அமைப்புகளின் கருத்துகளும் பலமானதாக தாக்கம் செலுத்துவதாக இல்லை. இவற்றை கருத்தில் கொண்டு சமூகக் கடமையாளர்கள் பணியாற்ற வேண்டும்.

தொடர்புக்கு: 88707 33434

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நடத்திய வாசிப்பு இயக்கம், நூல் கூடல்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தஞ்சை மாநகரம் ஒருங்கிணைத்த வாசிப்பு இயக்கம் தஞ்சை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தில், மாநகரத் தலைவர் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இணைச் செயலர் முனைவர் தி.சங்கீதா, உரையாளர் குறித்த அறிமுகத்தை வழங்கினார். எழுத்தாளர் தமிழ் கணேஷ், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் இமையம் அவர்களின் “செல்லாத பணம்” நாவல் குறித்த தன் வாசிப்பு அனுபவத்தைச் சமூக நோக்கோடு முன்வைத்தார்.

முனைவர் பட்ட ஆய்வாளர்கள் செ.பிரபாகரன், பூ.ஆனந்தன், தலைமை ஆசிரியர் இரா.பெருமாள், எழுத்தாளர் ரா.சிவகுமார், கவிஞர்கள் கே.ஆர்.சிவராமன், மு.குமார், தீவிர வாசிப்பாளர் அறிவழகன், விஜயகுமார் மற்றும் எம்.கார்த்திகா, இ.குருலஷ்மி முதலானோர் கலந்து கொண்டு கருத்துகளை முன்வைத்தனர்.





### நூல் கூடல்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், குமரி மாவட்டக் குழு சார்பில் நாகர்கோவிலில் நூல் கூடல் அரங்கினை ஒருங்கிணைப்புச் செய்திருந்தது. கவிதை, நாவல், சிறுகதை, சிறார் எழுத்து, ஆய்வு, அறிவியல் எனப் பல்வேறு தரப்பட்ட நூல்கள் குறித்துப் பேசப்பட்ட அரங்கை எழுத்தாளர் பொன்னீலன் வாழ்த்தி ஆரம்பித்து வைத்தார்.

தஞ்சை, கனிமொழி செல்லத்துரையின் ‘உயிர்ச்சுருட்டி’ நாவல் மீதான பார்வையை எஸ்.கே.கங்காவும், இராஜபாளையம் கண்மணிராசாவின் ‘கூத்து’ சிறுகதை குறித்து அனிதா பொன்னீலனும், பேராசிரியர் இராமசுப்பிரமணியனின் ‘சூரியப் புள்ளிகளும் இளம் வயது மரணங்களும்’ அறிவியல் நூல் மீதான வாசிப்பினை ச.முத்துராமனும் முன்வைத்தனர்.

தக்கலை ஸ்டாலின் ஜவஹரின் ‘வேணாட்டுசுவடுகள்’ வரலாற்று ஆய்வுநூல் குறித்து ச.அனந்தசுப்பிரமனியன், சு.சுந்தரராமனின் ‘பூமியில் தேவதை மொழி’ சிறார்களுக்கான கதைகள் குறித்து எம்.விஜயகுமார், கவிஞர் ந.நாகராஜனின் ‘காற்று திசைமாறும்’ கவிதை நூல் குறித்து கவிஞர் எம்.எம்.பைசல் ஆகியோர் பேசினர்.

தஞ்சை அகிலா கிருஷ்ணமூர்த்தியின் “அன்னதான வரிசையில் செயற்கை நுண்ணறிவு’ கவிதை நூல் மீதான பார்வையை ஹாமீம் முஸ்தபா, இராஜபாளையம் கவிஞர் நாகாவின் ‘யாரிடத்தும் புத்தர் இல்லை’ கவிதை நூல் மீதான பேராசிரியர் அருண்மொழி நங்கை, அருள்தந்தை குருசு கார்மலின் ‘சிந்தனை முத்துகள்’, ‘குழந்தைகளைக் கொஞ்சுவோம்’ கட்டுரை நூல்கள் மீதான பார்வையை குறித்து முனைவர் எ.லாரன்ஸ் மேரி ஆகியோர் முன்வைத்தனர். பேராசிரியர் முஸ்தபா நன்றி கூறினார்.

# கோவை மாவட்ட இடைக்குழு மாநாடுகள்

### மதுக்கரை ஒன்றியம்

மதுக்கரை ஒன்றிய 5வது மாநாடு குரும்பபாளையத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு கே.ஆர்.தங்கராஜ், ரேணுகா, பி.இளங்கோவன் ஆகியோர் தலைமை தாங்கினார். கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.ரவிந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் ஜி.பி.சக்திவேல் செயலாளராகவும், எம்.திருமூர்த்தி துணைச் செயலாளராகவும், கே.ஆர்.தங்கராஜ் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

கோவை பாலக்காடு சாலையில் மரப்பாலம் அருகில், ரயில்வே பாலத்திற்குக் கீழ் செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது. இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### ஆனைமலை ஒன்றியம்

ஆனைமலை ஒன்றிய மாநாடு மூத்த தோழர் பி.கண்ணப்பன், ஏ.எஸ்.முகமது இஸ்மாயில், டி.தனலட்சுமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் ஏ.பழனிசாமி ஏற்றினார். மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். எஸ்.ஆறுமுகம் செயலாளராகவும், ஏ.எஸ். முகமது மைதீன் துணைச் செயலாளராகவும், ஆர்.ராமதாஸ் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆனைமலை வழியாகச் செல்லும் ஆழியாறு ஆற்றில் கழிவுநீர் கலக்கப்படுகிறது. இந்தக் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்ய நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனைமலையில் உள்ள சுகாதார நிலையத்தைக் கூடுதல் படுக்கை வசதிகளுடன் கூடிய நவீன மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சூலூர் வடக்கு ஒன்றியம்

சூலூர் வடக்கு ஒன்றிய மாநாட்டிற்கு ரவிச்சந்திரன், கே.சுரேஷ்குமார், பி.ஆர். பழனிசாமி ஆகியோர் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மு.வ.கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் ஒன்றியச் செயலாளராக பி.எஸ்.ராமசாமி, துணைச் செயலாளராக ராக்கிமுத்து, பொருளாளராக எஸ்.வடிவேல் ஆகியோர் உட்பட 11 பேர் கொண்ட ஒன்றியக் குழு தேர்வும் செய்யப்பட்டது.




அவிநாசி தேசிய நெடுஞ்சாலையில், கோயமுத்தூரில் இருந்து கோல்டுவின்ஸ் வரை கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை நீலம்பூர் வரை நீட்டிப்பு செய்து தர வேண்டும். சோமனூரைச் சுற்றிப் புறவழிச் சாலை அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கோவை வடக்கு மண்டலம்

கோவை வடக்கு மண்டல 4வது மாநாடு, சின்னவேடம்பட்டியில் எம்.கிருஷ்ணன், வி.சின்னசாமி, ஆர்.சுதர்சன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் எஸ்.ஆர்.கோபால் ஏற்றி வைத்தார். மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.ஆர்.பாண்டியன் அறிக்கை வாசித்தார். ஏ.சி.செல்வராஜ் துவக்க உரை நிகழ்த்தினார். இதில் 19 பேர் கொண்ட மண்டலக் குழு தேர்வு செய்யப்பட்டது.

மாநகராட்சி நிர்வாகம் சொத்து வரி, வீட்டு வரி உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அன்னூர் ஒன்றியம்

அன்னூர் ஒன்றிய மாநாடு வடக்கலூரில் பி.கணபதி நினைவரங்கத்தில், மூத்த தோழர் பி.ஆர்.பழனிசாமி, கனச்செல்வன், ஈஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை எஸ்.ஏ.மாரிசாமி ஏற்றி வைத்தார். இதில் செயலாளராக கே.செல்வராஜ், துணைச் செயலாளராக ஈஸ்வரன், பொருளாளராக கனச்செல்வன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 15 பேர் கொண்ட ஒன்றியக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

அன்னூரில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும். அன்னூர் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காண வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வால்பாறை தாலுகா மாநாடு

வால்பாறை தாலுகா மாநாடு வால்பாறை ஏஐடியூசி அலுவலகத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு கோபால், சாலிமேத்யூ, ஜீவானந்தம் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.எஸ்.சுந்தரம், கே.வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர். செயலாளர் எஸ்.மோகன் வேலை அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார்.

வால்பாறையில் தொழிலாளியாக உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 3 சென்ட் வீட்டுமனை வழங்க வேண்டும். எஸ்டேட் சாலைகளை அரசுடைமையாக்கி அரசே நேரடியாகப் பராமரிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தொண்டாமுத்தூர் ஒன்றியம்

தொண்டாமுத்தூர் ஒன்றிய மாநாட்டிற்கு எம்.நாகராஜன், என்.பாலசுப்பிரமணியன், டி.எஸ்.வெங்கடாசலம் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநாட்டுக் கொடியை எம்.கே. பலராம் ஏற்றி வைத்தார். மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சாந்தி சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 15 பேர்கள் கொண்ட வட்டாரக் குழு தேர்வு செய்யப்பட்டது.

கோவை மாவட்டத்தில் சமீபத்தில் நீல அளவைகள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதில் பல குறைபாடுகள் உள்ளது. குறைபாடுகளை அரசு சரி செய்து மீல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

### பொள்ளாச்சி வட்டாரம்

பொள்ளாச்சி வட்டார மாநாடு, பர்வானா இல்லத்தில் நடைபெற்றது. மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் வீரன் ஏற்றி வைத்தார்.

மாநாட்டில் செயலாளராக வி.சண்முகம், துணைச் செயலாளராக கே.தங்கவேல், பொருளாளராக வி.என்.திருவேங்கடராஜ் ஆகியோர் உள்ளிட்ட 11 பேர்கள் கொண்ட வட்டாரக் குழு தேர்வு செய்யப்பட்டது.

### பெரியநாயக்கன் பாளையம்

பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாடு, பாரதி நகரில் உள்ள தேவர் இல்லத்தில் வி.கௌதம் குமார் அரங்கத்தில் நடைபெற்றது.

கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டுக் கொடியை செல்லமுத்து ஏற்றி வைத்தார்.

இதில் ஒன்றியச் செயலாளராக எஸ்.ராமமூர்த்தி, துணைச் செயலாளர்களாக கே.ஜெகநாதன், ஜி.வேலுமணி, பொருளாளராக செல்லமுத்துவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி நிறைவுறையாற்றினார். ஒன்றியத் துணைச் செயலாளர் கே.ஜெகநாதன் நன்றியுரை கூறினார்.

### மேட்டுப்பாளையம் நகரம்

மேட்டுப்பாளையம் நகரக் குழு நான்காவது மாநாடு, மகாதேவபுரம் பாலன் இல்லத்தில் நடைபெற்றது. மயில்சாமி, டி.மணி ஆகியோர் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.மௌனசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். மூத்த தோழர் வி.ஐயாவு மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். எஸ்.சண்முகசுந்தரம் வேலை அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார். மாநாட்டில் செயலாளராக ஏ.மன்சூர், துணைச் செயலாளராக ராஜ்கமல், பொருளாளராக சுந்தரம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மேட்டுப்பாளையத்தின் வழியாகப் பாய்ந்து ஓடும் பவானி நதி நீர் குடிநீருக்காகப் பெருமளவில் எடுத்துச் செல்லப்படுவதால், நிலத்தடி நீர் சேகரமாவது பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு இதில் கவனம் செலுத்தி மாற்று வழி காண வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ‘அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றிக் கடன் வழங்க வேண்டும்’

## தஞ்சாவூர் தெற்கு மாவட்ட மாநாடு வலியுறுத்தல்




தஞ்சாவூர் தெற்கு மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாவட்ட மாநாடு செங்கிப்பட்டியில் ஜூலை 3ஆம் தேதி மாலை மூன்று மணிக்குத் துவங்கியது. 26வது மாவட்ட மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் காசிராஜன் ஏற்றி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வீரமோகன் தலைமையில் தியாகிகளுக்கு அஞ்சலியும், தஞ்சை மாவட்டத்தின் மூத்த தலைவர்கள் திருஞானம், முருகையன், கிருஷ்ணன் ஆகியோரின் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கட்டுப்பாட்டுக் குழு செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ. பழனிச்சாமி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான க.மாரிமுத்து, மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி ஆகியோர் தலைமையில் செங்கிப்பட்டி காவல் நிலையம் அருகில் இருந்து செம்பட்டை பேரணி புறப்பட்டு மாநாட்டுத் திடலுக்கு வந்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிரதி நிதிகள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பக்கிரி சாமி, முகில், கண்ணகி ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டின் வரவேற்புக் குழுச் செயலாளர் ஆர்.இராமச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்டக் குழு உறுப்பினர் பூபேஷ் குப்தா வாசித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.பழனிச்சாமி மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் முத்துஉத்திராபதி அரசியல் வேலை அறிக்கையைச் சமர்ப்பித்தார். அமைப்புநிலை அறிக்கையை மாவட்ட துணைச் செயலாளர் சக்திவேல் முன்மொழிந்தார்.

பின்னர் அறிக்கையின் மீது விவாதங்கள் நடைபெற்று செழுமைப்படுத்தப் பட்டது. வரவு செலவு அறிக்கையைத் தணிக்கை குழு தலைவர் கோவிந்தராஜ் சமர்ப்பித்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சந்திரகுமார், பாலசுந்தரம், கோவிந்தராசு, பாஸ்கர், திருநாவுக்கரசு, கலியபெருமாள், சேவையா, விஜயலட்சுமி, பாஸ்கர் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். தொடர்ந்து புதிய மாவட்டக் குழு தேர்வு செய்து நிர்வாகிகள் மற்றும் புதிய மாவட்டச் செயலாளர் மற்றும் மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளும் தேர்வு செய்யப்பட்டனர். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான க.மாரிமுத்து மாநாட்டினை நிறைவு செய்து உரையாற்றினார்.

மாவட்ட மாநாட்டில் மாவட்டச் செயலாளராக கோ.சக்திவேல், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.இராமச்சந்திரன், மாவட்டப் பொருளாளராக கோ.பாஸ்கர் மற்றும் 44 பேர் கொண்ட மாவட்டக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

### தீர்மானங்கள் :

பருவ காலங்களில் மழை நீரைப் பாதுகாக்கவும், தண்ணீர்ப் பற்றாக்குறை காலங்களில் ஈடுகட்டவும், நீர்நிலை ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும், கல்லணைக் கால்வாயில் இருந்து புதிய கட்டளை மேட்டு வாய்க்கால், உய்யக்கொண்டான் நீட்டிப்பு வாய்க்காலிற்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும், பணிகளைத் துவக்க வேண்டும், கிராமப்புறத் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றிக் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மீண்டும் தனி நாடாளுமன்றத் தொகுதி கொண்டு வர வேண்டும்

## புதுக்கோட்டை மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட 16வது பிரநிதிகள் மாநாடு 12.7.2025 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் புதுக்கோட்டை எஸ்.வி.எஸ் விழா அரங்கில் நடைபெற்றது. கே.ஆர்.தர்மராஜன், ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமைக் குழுவாகச் செயல்பட்டார்கள்.

கட்சியின் கொடியினை மூத்தத் தோழர் ஜெபமாலைபிச்சை ஏற்றி வைத்தார். மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் என்.ஆர்.ஜீவானந்தம் வரவேற்புரை ஆற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் ந.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ துவக்கி வைத்துப் பேசினார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் எக்ஸ் எம்.எல்.ஏ, அரசியல் விளக்கவுரை நிகழ்த்தினார்.

மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள். மாவட்டச் செயலாளர் த.செங்கோடன் வேலை அறிக்கையை முன்வைத்தனர். அதன்மீது விவாதம் நடைபெற்றது

மாவட்டம் முழுவதிலும் இருந்து 150 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதில் 37 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. அதில் ஒரு இடம் காலியாகவும் தேர்வு உறுப்பினர்களாக 4 தோழர்களும் தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தேர்வில் மாவட்டச் செயலாளராக மீண்டும் த.செங்கோடன் தேர்வு செய்யப்பட்டார்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

புதுக்கோட்டை மாவட்டம் ஆறு சட்டமன்ற தொகுதிகளைக் கொண்ட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மீண்டும் தனி நாடாளுமன்றத் தொகுதி கொண்டு வர வேண்டும்.

காவேரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கி விரைந்து செயல்படுத்திட வேண்டும்.

தஞ்சாவூரில் இருந்து கந்தர்வகோட்டை வழியாக புதுக்கோட்டைக்கும் பட்டுக்கோட்டையில் இருந்து ஆலங்குடி வழியாக மணப்பாறைக்கும் புதிய ரயில் வழித்தடங்களை உருவாக்க வேண்டும்.

புதுக்கோட்டையில் இளைஞர்கள் வேலை பெரும் வகையில் தொழிற்பேட்டைகளை உருவாக்க வேண்டும்.

என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.






# தென்பெண்ணை பாலாறு இணைப்புக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுக

## திருப்பத்தூர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பத்தூர் மாவட்ட 24வது மாநாடு 2025 ஜூன் மாதம் 29, 30 தேதிகளில் கந்திலியில் நடைபெற்றது. 29ஆம் தேதி நடைபெற்ற பேரணியில் இறுதியில் வரவேற்புக் குழு தலைவர் ஏ.சி.சாமிக்கண்ணு தலைமையில் வரவேற்புக் குழு செயலாளர் எம்.நந்தி வரவேற்புரையுடன் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

30 ஆம் தேதி தியாகி தோழர் சி.சின்னராஜி நுழைவு வாயில், தோழர் கே.முருகேசன் நினைவரங்கத்தில் வள்ளி மஹாலில் தோழர் ஏ.சி.சாமிக்கண்ணு, எம்.பூபதி ஜெயலட்சுமி தலைமையில் பிரதி நிதிகள் மாநாடு நடைபெற்றது. முன்னதாக கே.புஷ்பராஜ் மாநாட்டுக் கொடியை ஏற்றினார். வரவேற்புக்குழு செயலாளர் எம்.நந்தி வரவேற்புரையாற்றினார். மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநாட்டைத் தொடங்கிவைத்துக் கட்சிப் பேராயத்தின் அரசியல் வரைவு தீர்மானத்தையும் மாநில அரசியில் நிலைமைகளை விளக்கிப் பேசினார்.

மாவட்டச் செயலாளர் எம்.சுந்தரேசன் அரசியல் அமைப்பு நிலை, வேலையறிக்கையைச் சமர்ப்பித்தார். மூன்று பெண்கள் உட்பட 25 பேர் கொண்ட மாவட்டக் குழுவும், மாவட்டச் செயலாளராக எம்.நந்தி மாவட்டத் துணைச் செயலாளர்களாக கே.சங்கர், ஆர்.வெங்கடேசன் மற்றும் மாவட்டப் பொருளாளராக கே.ஆர்.வேணுகோபால் மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது.

வீணாகக் கடலில் கலக்கும் ஆற்றுத் தண்ணீரை பயன்படுத்த தென்பெண்ணை – பாலாறு இணைப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவும்,குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் நேரடியாக நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

திருப்பத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து கந்திலியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய தாலுகாவை அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொருளாளர் எம்.ஜி.தேவராஜ் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# மதுரை புறநகர் மாவட்ட மாநாடு





மதுரை புறநகர் மாவட்ட மாநாடு ஜூலை 12,13 இல் நடைபெற்றது.

12.07.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநாட்டுப் பேரணி தொடங்கியது. 6.00 மணிக்கு பி.முத்துவேல் புறநகர் மாவட்டச் செயலாளர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்டக் குழு உறுப்பினர் டி.அலெக்ஸ் வரவேற்புரை வழங்கினார். தேசியக் குழு உறுப்பினர் டி.ராமசாமி மாநாட்டுச் சிறப்புரை ஆற்றினார். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு பொண்ணுப் பாண்டி எக்ஸ் எம்.எல்.ஏ, பா. காளிதாஸ், அலங்கை ஒன்றியச் செயலாளர் வி.குமரேசன் நன்றியுரை வழங்கினார்.

13.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநாட்டுக் கொடியினை பா. காளிதாஸ் ஏற்றினார். மாநாட்டுத் தலைமைக் குழு சுரேஷ் குமார் மூக்கமால் பாண்டியன், தேசியக் குழு உறுப்பினர் டி.ராமசாமி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.இராதாகிருஷ்ணன், எக்ஸ் எம்.எல்.ஏ பொண்ணுப்பாண்டி, மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு பா.காளிதாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றி மாநாட்டை வழி நடத்தினார்கள்.

மாநாட்டில் மீண்டும் பி.முத்துவேல் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாவட்டக் குழு உறுப்பினர் டி.அலெக்ஸ் (எ) பாலா முருகன் நன்றியுரை வழங்கினார்.

# காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டும்





## நாகை மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

வேதாரண்யத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்ட 25வது மாநாடு ஜூலை 14, 15 இல் தொடங்கியது.

இரண்டாவதுநாளான செவ்வாய்க்கிழமை நிறைவடைந்த மாநாட்டில் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு செயலாளர் கோ. பழனிச்சாமி, நாகைத் தொகுதி மக்களவை உறுப்பினர் வை.செல்வராசு, கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ.பாண்டியன், மாவட்ட முன்னாள் செயலாளர் என்.சம்பந்தம், மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் கே.பாஸ்கர், விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் வி.சரபோஜி, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் நாகராஜன், மாவட்டப் பொருளாளர் பாபுஜி, நிர்வாகக் குழு டி.நாராயணன், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் எஸ்.மேகலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில், 37 பேர்களைக் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டு மாவட்டச் செயலாளராக சிவகுரு.பாண்டியன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

நாகை மாவட்டத்தில் வைக்கோல், சவுக்கு, கருவேல் மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு காகிதத் தொழிற்சாலை அமைய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் மின் இறைவைப் பாசனத் திட்டப் பொறிமனைகளைச் சீரமைக்க வேண்டும், இலங்கை கடற்கொள்ளையர்கள், கடற்படையினரால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதை அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.